பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 01 புதன்கிழமை (14-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:108

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

## எலும்புக்கூடுகளின் மரபணுப் பரிசோதனை தேவையான நிதி ஒதுக்காததால் தடங்கல்!

### செம்மணிப் புதைகுழி வழக்கில் பொலீஸ் தகவல்

கொழும்பு,மார்ச்14

செம்மணிப் புதைகுழியில் மீட்கப்பட்ட 14 எலும்புக் கூடுகள் மீதான மரபணுப் பரிசோதனை தடங்கலுற்றுள்ளது - இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மரபணுப் பரிசோதனைக்கான நிதியை பாதுகாப்பு அமைச்சு இதுவரை வழங்காதிருப்பதே இதற்குக் காரணம்.

நேற்றைய விசாரணையின்போது குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலீஸார் கொழும்பு நீதிமன்றில மேற்கண்ட தகவலைத் தெரிவித்தனர்.

எலும்புக் கூடுகளை மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்த லண்டனுக்கு எடுத்துச் செல்லவேண்டும் ஆனால் அதற்கான நிதியை பாதுகாப்பு அமைச்சு இன்னும் ஒதுக்கித் தரவில்லை என்று பொலீஸார் விவரித்தனர்.

செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு நீதிமன்ற நீதிவான் கே.எம்.பந்துல முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அப்போது நீதிமன்றில் சமுகமளித்திருந்த குற்றப் புலனாய்வுப் பொலீஸார் மரபணுப் பரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியாமைக்கான மேற்சொன்ன காரணத்தை விவரித்தனர்.

இதேவேளை -

வழக்கு விசாரணை நேற்று நடைபெற்றபோது ஏற்கனவே தடுத்துவைக்கப்பட்டுள்ள ஐந்து படையினரும் ஆஜர் செய்யப்பட்டனர்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களில் ஒருவரான அம்பாறையைச் சேர்ந்த பொலீஸ்

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஜி.சீ.ஈ. பரீட்சை முடிவுகள் வார இறுதியில்

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ.(சாதாரண) தரப் பரீட்சையின் முடிவுகள் இவ்வார இறுதியில் வெளியாகும் என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பரீட்சை முடிவுகள் வெளியாகும் அதேநேரத்தில் 'இன்ரநெற்'றிலும் முடிவுகள் வெளியிடப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

### சிப்பாய் பலி!

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் கால் நடையாக ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் கிரனேட் வீசியதில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

# பிரச்சினைக்குத் தீர்வு காணும் சக்தி இலங்கை அரசாங்கத்துக்கு உண்டு

## அடுத்தவர் தயவு வேண்டியதில்லை ஜேர்மனியில் ஜனாதிபதி சந்திரிகா

பொன்,மார்ச்14

**இலங்கையின் நீண்டகாலப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்குச் சரியான தீர்வினைக் காணும் சக்தி இலங்கை அரசாங்கத்துக்கு உண்டு. வெளியார் எவரின் உதவிகளையும் நாம் நாடி நிற்கவில்லை.**

**நோர்வே அரசின் அனுசரணையுடன் இடம்பெற்றுவரும் சமாதான முயற்சிகள் எதிர்பார்த்ததைவிடத் துரிதமாக நடைபெற்று வருகின்றன.**

**இவ்வாறு ஜேர்மனியில் அந்நாட்டு வர்த்தகர்கள் மத்தியில் பேசுகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.**

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் ஜேர்மன் சென்றடைந்த ஜனாதிபதி அங்கு வர்த்தகர்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார். அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நடைபெறும் யுத்த நடவடிக்கைகளுக்காக ஜேர்மனியில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் நேற்று அடையாள வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,மார்ச்14

வடக்கு - கிழக்கில் பணியாற்றும் டாக்டர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்குவதில் காட்டப்படும் பாரபட்ச நடவடிக்கையைக் கண்டித்து யாழ்.போதனா வைத்தியசாலை டாக்டர்கள் நேற்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

டாக்டர்களின் வேலைநிறுத்தத்தினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பகுதிகள் மட்டுமே நேற்று இயங்கின. கிளினிக்குகள், வெளிநோயாளர் பிரிவுகள் இயங்கவில்லை. இதனால் நோயாளர்கள் ஆஸ்பத்திரிக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை வடக்கு - கிழக்குப் பகுதியிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் டாக்டர்கள் நேற்று

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்க அமைச்சர் ஆறுமுகம் காலக்கெடு

### மலையகச் சத்தியாக்கிரகம் சூடு பிடிக்கிறது

கண்டி,மார்ச்14

தோட்டத் தொழிலாளர்களுக்கு நானூறு ரூபா சம்பள உயர்வு வழங்குவது தொடர்பான அறிவிப்பை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்குள் அரசு வெளியிடாவிட்டால், ஆளும் கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு வழங்கிவரும் ஆதரவை இ.தொ.கா. விலக்கிக்கொள்ள நேரிடும்.

சத்தியாக்கிரகம் சூடுபிடித்துள்ள இவ்வேளையில் இ.தொ.காவின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

ஹற்றனில் சத்தியாக்கிரகம் மேற்கொண்டுள்ள அனைத்துத் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கலந்துரையாடலில் இந்த முடிவை அமைச்சர் தெரிவித்தார்.

போராட்டத்தை விஸ்தரிப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## புத்தர் சிலைகள் தகர்ப்பை எதிர்த்து பிக்குமார் தலைமையில் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

### அமைச்சர்களும் பங்குபற்றினர்

கொழும்பு,மார்ச்14

ஆப்கானிஸ்தானில் புத்தர் சிலைகளைத் தகர்த்துவரும் தலிபான்களின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று பௌத்த பிக்குகளின் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டனர்.

அமைச்சர்களான மகிந்த ராஜபக்ஷ, இந்திக்க குணவர்தன, ஏ.எச்.எம்.பௌஸி ஆகியோரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர்.

பௌத்த மகா சம்மேளனம் இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது.

ஆர்ப்பாட்டத்தில கலந்துகொண்டோர் தலிபான்களுக்கு எதிரான சுலோகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியிருந்தனர். (க-7)

## வவுனியா கல்வியியற் கல்லூரியில் தமிழ் - சிங்கள மாணவர் மோதல்!

### விடுதிக்கு வந்து பொலீஸார் தாக்குதல்!

வவுனியா,மார்ச்14.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கிடையே நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் 8 மாணவர்களும், விடுதிப் பொறுப்பாளர் ஒருவரும் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் அனைவரும் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிகச் சிகிச்சைக்காக நேற்றுக் காலை அனுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் தமிழ் மாணவர் ஒருவர் கல்லூரி வளவில் வைத்துச் சிங்கள மாணவர் ஒருவரால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து தமிழ் மாணவர்களும், சிங்கள மாணவர்களும் மோதிக் கொண்டனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## 'ரியூட்டறி'களை வெள்ளி தோறும் மாலை 5 மணிக்கு மூட முடிவு

வலி.மேற்குப் பிரதேசப் பகுதியில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் வெள்ளிக்கிழமைகளில் ஆலயங்களுக்குச் செல்ல வசதியாக அன்றைய தினம் மாலை 5 மணிக்குப் பின்னர் கல்வி நிலையங்களை மூடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

வலி.மேற்குப் பிரதேசத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலைய இயக்குநர்கள் பங்குபற்றிய கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வலி.மேற்குப் பிரதேச சபை அலுவலகத்தில் அந்தச் சபையின் தலைவர் என்.திரிலோகநாதன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தத் தீர்மானத்தைப் பின்பற்றி ஏனைய பிரதேசங்களில் உள்ள தனியார் கல்வி நிலையங்களையும் வெள்ளிக்கிழமைகளில் மாலை 5 மணிக்கு மூட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார். (க-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி

உடுவில்,நல்லூர் ஆகிய பிரதேசங்களின் பிரதேச செயலரும்
இந்து சமய பேரவையின் உப தலைவருமான
**அமரர் ஆறுமுகம் மகாலிங்கம் பி.ஏ.**
(இலங்கை நிர்வாக சேவை)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தி னருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன் னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும்,
யாழ்.மாவட்டச் செயலக அலுவலர்களும்,
நலன்புரிக் கழகத்தினரும்.

(C/15715)

# இசை வேளாளரின் துயர அஞ்சலிகள்



இலங்கை இசை வேளாளர் சமூக நலனுக்காக வும், இசை மிளிரும் ஈழவள நாட்டுக்காகவும் அல் லும் பகலும் அயராது உழைத்தவரும் சைவத்திற் கும் தமிழிற்குத் தொண்டாற்றியவருமான சமூக சேவையாளராகிய

**அமரர் ஆ.மகாலிங்கம்**

அவர்களுடைய மறைவையொட்டி இலங்கை இசை வேளாளர் சமூகம் ஆழ்ந்த துயருடன் தமது இதய அஞ்சலிகளைத் தெரிவித் துக்கொள்வதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இணுவில். (85415) - இலங்கை இசை வேளாளர் சங்கம்.

# கண்ணீர் அஞ்சலி



சைவச் சிறுவர் இல்ல ஸ்தாபகரும், இந்து சமயப் பேரவையின்
உப தலைவரும், உடுவில் பிரதேச செயலருமான

**ஆறுமுகம் மகாலிங்கம்**

அவர்களின் திடீர் மறைவைக் கேள்வியுற்று ஆழ்ந்த அதிர்ச் சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரது ஆத்மா சாந் தியடைய பிரார்த்திப்பதோடு அவர் தம் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அ.பொ.நடராசா
இணுவில் தெற்கு. (C/15707) அண்ணா தொழிலகம்

# கண்ணீர் அஞ்சலி



முன்னாள் பிரதேச கல்வித்
திணைக்கள நிர்வாக
உத்தியோகத்தர்

**ஆறுமுகம் மகாலிங்கம்**

(பிரதேசசெயலர், உடுவில்)

அன்னாரின் மறைவையொட்டி அவர் களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதா பங்களையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவிப்ப தோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக் கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(85404)

# கண்ணீர் அஞ்சலி

**ஆறுமுகம் மகாலிங்கம்**

(பிரதேச செயலர், வலி.தெற்கு உடுவில்,
உபதலைவர், இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்)

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் மிகுந்த மன வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரம டைந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந் தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலி.மேற்கு பிரதேச செயலக
நலன்புரிச் சங்கமும்
பிரதேச செயலகம், அனைத்து உறுப்பினர்களும்.
சங்கானை. (85417)

## விஞ்ஞான பீடப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,மார்ச்14

யாழ்பல்கலைக்கழக, விஞ்ஞானபீட முதலாம் வருட மாணவர்களுக்கான அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும 26 ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் மாதம் 14ஆம் திகதிவரை நடைபெறும்.

2ஆம் வருட மாணவர்களுக்கான அரை ஆண்டுப் பரீட்சைகள் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகி 25ஆம் திகதிவரை நடைபெறும் - இவ் வாறு யாழ்பல்கலைக்கழக பரீட்சைப பிரிவினர் அறிவித்துள்ளனர்.(க-6-ரி)

## அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,மார்ச்14

பாடசாலை அதிபர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ்மாவட்ட அதிபர்களுக்கான பதவி உயர்வு நேர்முகப் பரீட்சை யாழ்ப்பா ணத்திலேயே நடத்தப்படும் என தமி ழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அறிவித்துள்ளார்.

இந்த நேர்முகப் பரீட்சைகள் கொழும்பில் நடத்தப்படும் என முன் னர் அறிவிக்கப்பட்டிருந்தது - அதை அடுத்து அதிபர்கள் கொழும்பு சென்று நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவதில உள்ள கஷ்டங்கள் குறித்து கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜயந்தவு டன் தொடர்புகொண்டு நேர்முகப் பரீட்சையை இங்கு நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் - சேனாதிராசா அறிவித்துள்ளார்.(க-7)


கணக்கீடு
**A/L DAY CLASS**
கட்டுப்பாட்டுக் க/கு
ஆரம்பம்-14.3.2001
**Wed. 1.30 p.m.**
(Mon. 9.00,
Wed., Fri 2.00)
Mr .தவா B.Com.,(Hons)(Acc.Spl.)
**SHAMROCK**
(C/15712)

அறிவொளி - NALLUR
**A/L 2003 பொறியியல்**
திரு.ஸ்பெல்மன்
ஆரம்பம் 15.03.2001 5p.m.
* ELECTRONICS
MON., WED. -5p.m.
2001 இணைந்த கணிதம்
* புள்ளிவிவரவியல்
* நேர்கோடு
B.ரவிந்திரன்
Tue 3p.m. Sat,Sun 4p.m.
(85392)

ராஜா
யாழ்ப்பாணம்
11 அக்கடமி அவாட்
பெற்ற சிறந்த படம்
டைட்டானிக்
தமிழ்
மாணவர்களும் படக்காட்சி
பார்ப்பதற்கு கல்லூரி மூலம்
ஆசனங்களைப் பதிவுசெய்து
கொள்ளலாம்.
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)

லஷ்சுமி இணுவில்
கார்த்திக், மந்த்ரா,
கவுண்டமணி
(3 வேடங்களில்) நடித்த
கண்ணன் வருவான்
(றீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)
காதுக்கினிய பாடல்கள் கொண்டது

நாகம்ஸ்
சுன்னாகம்
பிரசாந்த், தேவயானி,
பிரகாஷ்ராஜ்
நடித்த
அப்பு
(றீல்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30
(புதிய நேரம்) (85410)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.
**கணபதிப்பிள்ளை சண்முகநாதன்**
(ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர், புலோலி மத்தி)

பணியிலும் பக்தியிலும் உயர்ந்து
பாரினில் புகழ் மேலோங்க வாழ்ந்து
மக்கள் சேவையே மகேசன் சேவையாக
எஞ்ஞான்றும் இன்முகத்துடன் சலிக்காமல்
களைக்காமல் துணிவுடன் செயலாற்றி
அகவை ஐம்பத்தெட்டை அடைந்து
அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற
அவரது நற்சேவையைப் பாராட்டுவதுடன்
அவர் தமது குடும்பத்துடன் சுகமாய்
வாழ வாழ்த்துகின்றோம்.

- பொ.அற்புதஜெயம் குடும்பம்
(கிராம அலுவலர், கச்சாய்)
ந.இராசகுமாரன் குடும்பம்
(கிராம அலுவலர், இடைக்குறிச்சி, வரணி)
பொ.லோகேந்திரன் குடும்பத்தினர்.
(85247) (கிராம அலுவலர், வெள்ளாம்போக்கட்டி)

# "கவிமாமணி" வாழ்க!



அறிஞர்கள் பலரைப் பெற்றெடுத்த கல்வயல் ஊரைப் பிறப்பிடமாகவும் பெரியரசடி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட **புலவர் வே.குமாரசாமி** அவர்கள் இந்து சமயப் பேரவையினால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசையை முன்னிட்டு அண்மையில் நடத்தப்பட்ட மரபுக் கவிதைப் போட்டி யில் முதலாவது இடத்தைப் பெற்று **"கவிமாமணி"** எனும் பட்டத்தினையும் பொற்கிழியையும் பரிசாகப் பெற்றுக்கொண்டமை யையிட்டு அன்னாரை நாம் பெருமையுடன் வாழ்த்திப் பாராட்டு கின்றோம்.

நல்லாசிரியராகவும், தபாலதிபராகவும் கடமைபுரிந்து, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளராகக் கடமை புரிந்து வரும் அன்னார் மாணவப் பருவ காலகதிலிருந்தே பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றி முதன் மையான பரிசில்களைப் பெற்றுள்ளார்.

மேலும் 1999ஆம் ஆண்டு பண்டிதமணி நூற்றாண்டு விழா சார்பாக நடைபெற்ற கவிதைப் போட்டியிலும் முதலாவது இடத்தைப் பெற்று தென்மராட்சிப் பிரதேசத்துக்குப் பெருமை சேர்த்த கவிஞராவார். இலக்கண, இலக்கியத் துறைகளில் பரந்துபட்ட அறிவையுடைய அன்னார் சமூக, சமயத் துறைகளிலும் ஆர்வமுடன் நல்லறிஞர்களு டன் பங்கு பற்றி உழைக்கும் ஓர் இலக்கிய ஆர்வலராவார்.

கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோயில் திருப்பணிச்சபை உறுப்பினராகவும், தென்மராட்சிப் பிரதேச கலாசாரப் பேரவையின் முன்னாள் தலைவராகவும், யாழ் இலக்கிய வட்டத்தின் நிர்வாகசபை உறுப்பினராகவும் இருந்து பணிபுரிவதுடன் தென்மராட்சிப் பிரதேசத்தின் கீர்த்தையும் ஆக்கி அளித்த பெருமை அன்னாரைச் சேர்ந்ததாகும்.

மேலும் சிறப்பாக கவியரங்கு நிகழ்வுகளில் பங்கு பற்றி தர்க்கரீதியாக தனது பாணியில் கவி ஆக்கி வழங்கி தமிழ்மொழிக்கு வளம் செய்யும் ஓர் ஆசானாவார். சிறப்பாக கவிதைத் தொகுதிகளை ஆக்கியும், தொகுத்தும் ஈழத்திலும் தென்னிந்தியா விலும், வெளியிட்டு வைத்த பெருமைக்கு உரியவராவார்.

அன்னார் மேலும் பல புதிய ஆக்கங்களை வெளியிட்டு தமிழ் இலக்கியத்துக்கு வளம் ஊட்டி பிரதேசத்துக்குப் பெருமை சேர்க்க இறைவன் சகல கடாட்சங்களையும் வழங்க வேண்டுமென வேண்டி, அன்னாரையும், அவர் தம் குடும்பத்தினரையும் சிறப்புடன் வாழ பெருமனதுடன் வாழ்த்துகின்றோம்.

(C/15684) - தென்மராட்சி வாழ் மக்கள்.

# கண்ணீர் அஞ்சலி



**ஆறுமுகம் மகாலிங்கம்**

(பிரதேச செயலர் - உடுவில்)

பிறந்த குப்பிளானூரில்
பெருமைதனைச் சேர்த்தவரே
சிந்தனையும் சிரிப்பும்
இணைந்த முகம் கொண்டவரே
சிறப்புறு கடமை தனை
சீராகச் செய்தவரே!
தீயிலிட்ட புழுப்போல
நின் குடும்பம் துடித்து நிற்க
கண் காணாத் தேசமதில்
சகோதரரும் கலங்கி நிற்க
நின் பண்பதனில் ஆசை கொண்டு
படைத்தவனும் பறித்தானோ?
நின் ஆத்ம சாந்திக்காய்
அவர் மனம் ஆறுதலுக்காய்
ஆண்டவனைத் தொழுதிடுவோம்
வேறென்ன செய்திடுவோம்?

இ.சி.தெட்சணாமூர்த்தி
(85398) கிராம அலுவலர்

# உதயன்

## பொருளாதாரச் சாணக்கியம்!

இலங்கை அரசாங்கம் இப்போது முன்னர் இருந்ததை விட முற்றிலும் வேறுபாடான பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வருகின்றது. உலக வங்கியின் ஆலோசனையின் பிரகாரமே அக்கொள்கைகள் வகுக்கப்படுகின்றன.

முன்னர் எல்லாம் வளர்முக நாடுகளைத் திரைமறைவில் இருந்து இயக்கிய உலக வங்கி, இப்போது எவ்வித கூச்சமும் இன்றி மிக வெளிப்படையாக இயங்குகின்றது; ஆலோசனை வழங்குகின்றது; அதன் பொருட்டு சகல பரப்புகளிலும் கருத்தரங்குகளையும் பயிற்சி வகுப்புக்களையும் நடத்துகின்றது.

உலக வங்கியின் நிதி உதவியும் ஆலோசனைகளும் இல்லாவிடில் இலங்கையின் பொருளாதாரச் செயற்பாடு ஊசலாடும் என்று கூறுமளவுக்கு அதன் ''பங்களிப்பு''ப் பெருகி உள்ளது.

அரசாங்கத் திணைக்களக்களையும், சபைகளையும், கூட்டுத்தாபனங்களையும் தனியார் நிறுவனங்கள் ஆக்குவதில் உலக வங்கி வெற்றிக் களமாடி உள்ளது. இது விடயத்தில் தனியார் மயமாக்கல் கடந்த ஆறு வருடங்களில் இந்த நாட்டில் அறுபது சதவீதம் ஈடேறி உள்ளது எனலாம்.

வரவு—செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டதிலும் உலக வங்கியின் யோசனையும், பங்களிப்பும், செல்வாக்கும் பெருமளவில் இருந்திருக்கும் என்பதில் எள்ளளவு சந்தேகமும் இல்லை ஆனால் இவ்வருடத்துக்கான வரவு—செலவுத் திட்டம் தனியார் துறைக்கும் பெரும் பாதிப்பை ஊண்டாக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது,

நாட்டின் பிரதான வர்த்தக நிறுவனமான இலங்கை வர்த்தக சம்மேளனமே வரவு—செலவுத் திட்டம் குறித்துப் பாதகமான மதிப்பீட்டைச் செய்துள்ளது. வரவு—செலவுத் திட்டம் தனியார் துறையை ஊக்குவிக்கும் வகையில் அமையவில்லை என்று வர்த்தக சம்மேளனம் எடுத்து விளக்கியுள்ளது. தனியார் துறையின் நன்மைக்கு உதவும் வகையில் வரவு—செலவுத் திட்டம் அமையவில்லை என்றும் சம்மேளன வட்டாரங்கள் சுட்டிக்காட்டி உள்ளன.

வரவு— செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையைச் சரிசெய்வதற்கு வெளி நாட்டுக் கடனை ''எக்கச்சக்கமாக''ப் பெறவேண்டிய கட்டயாம் உண்டாகும். அதன் விளைவு வங்கிகளின் வட்டிவிதங்கள் அதிகரிக்கும். இது தனியார் துறையின் இயக்கத்துக்கும் செயற்பாட்டுக்கும் மிகவும் பாதகமாக அமையும்.

வரவு—செலவுத் திட்டங்களில் தெரிவிக்கப்படும் புள்ளிவிவரங்களுக்குள் நாளாந்த நடைமுறைகள் அடங்கியதாக எப்போதும் வழமை இல்லை. அதனால் பிரதி நிதி அமைச்சர் பீரிஸ் தமது உரையில் தெரிவித்த கணக்குகள் வெறும் உத்தேசங்களே என்பதனை எந்தப் பொருளியல் மாணவனும் அறிவான்.

இதனை அறிந்து தான் வரவு—செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையைச் சரிசெய்ய கடன் வழங்க உலக வங்கியும் அதன் சக அமைப்பான சர்வதேச நாணய நிதியமும் முன் வந்துள்ளன. ஆனால் அதற்கு பல நிபந்தனைகளை உலக வங்கி விதித்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளி விடும் உலக வங்கியின் பொருளாதாரச் ''சாணக்கியம்'' இலங்கையர் ஒவ்வொருவரையும் அடகு வைக்கும் நாள்கள் வெகு தூரத்தில் இல்லை என்பதனை உணர முடிகிறதல்லவா?

# யாழ். நகரப் பிரதேசத்தில் மின்வெட்டு குறைக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச். 14

யாழ். நகரப்பகுதியில் மூன்று நாள்களுக்கு ஒரு தடவை மட்டும் மின்வெட்டினை அமுல் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கை மின்சார சபையின் வட பிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர். முத்துரட்னானந்தம் இத்தகவலை உதயனுக்கு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

பரமேஸ்வரா சந்தி மின் பரிவர்த்தன நிலையத்தில் பழுதடைந்த மூன்று மின் மாற்றிகளும் மாற்றப்படவுள்ளன.

இதற்காக மூன்று மின்மாற்றிகள் கொழும்பில் வைத்து கப்பலில் ஏற்றப்பட்டு யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன.

இந்த மின்மாற்றிகள் பொருத்தப்பட்டதும் தற்பொழுது அமுலில் உள்ள மின்வெட்டு நேரம் நகரப் பகுதியில் மட்டும் குறைக்கப்படும்.

மூன்று நாளைக்கு ஒரு தடவை மின்வெட்டு அமுல் செய்யப்படவுள்ளது. நகரப் பகுதியில் தற்போது காலை 5—30 மணிக்குப் பின்னர் அமுல் செய்யப்பட்டு வரும் மின்வெட்டும் நிறுத்தப்படவுள்ளது.

நகரப்பகுதியில் மட்டும் மின்வெட்டில் மாற்றம் செய்யப்படும். ஏனைய பகுதிகளில் வழமை போன்று ஒன்றுவிட்டு ஒருநாளுக்கு மின்வெட்டு தொடர்ந்து அமுலில் இருக்கும்.

சட்டவிரோத மின்பாவனையை நிறுத்துவதன் மூலமும் அதிகாலை மற்றும் முன்னிரவு நேரங்களில் பொதுமக்கள் மின்பாவனையைக் குறைப்பதன் மூலமும் மின்வெட்டு நேரத்தைக் குறைக்க ஒத்துழைப்பு வழங்கமுடியும்.

கடந்த வருடம் மின்சார சபையின் வடபிராந்திய அலுவலகத்துக்கு நிதி எதுவும் ஒதுக்கீடு செய்யப்படாமையினால் மின்மார்க்க விஸ்தரிப்பு வேலைகள் எதனையும் தற்போது செய்ய முடியாதுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

(ஐ-5)

## தொழில் முயற்சியாளர் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். பல்கலைக்கழகம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் போன்றவை இணைந்து தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சிநெறி ஒன்றினை நடத்தவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்பும் தொழில் முயற்சியாளர்களை யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக் கட்டடத்திலுள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 14

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்றும் நாளையும் இடம்பெறவுளஎது. (ஐ—3)

★ ★ ★

பருத்தித்துறை, தும்பளை, நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் மண்டலாபிஷேகப் பூர்த்தியும் சகஸ்ர மகா சங்காபிஷேகமும் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

(ம-10)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 14

காரைநகர், களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் மண்டல பூர்த்தி சங்காபிஷேக விழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ம—10)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 14

இணுவில், மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய ஆலயத்தின் மண்டலாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

(ம-10)

## நாளை

பங்குனி 2

**வியாழக்கிழமை**

திதி: ஷஷ்டி

... லை 5.27 வரை;

நட்சத்திரம்: அனுஷம்

நள்ளிரவு 12-01 வரை.

சுபநேரம்: 07.51 - 09.21

ராகுகாலம்: 01.51 — 3.21

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

## கல்வியியல் கல்லூரிகளில் பயின்றோருக்கு நியமனம்

யாழ்ப்பாணம் மார்ச் 1

யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கெனப் 14 பேருக்கு உதவி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாழ். கல்வி வலயத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தமது நியமனக் கடிதங்களை இன்று புதன் கிழமை யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

நியமனம் வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ சுகிதா கணேஸ் — பூந்தோட்டம், வவுனியா (வண்ணை நாவலர் ம.வி.)

★ குகப்பிரியா இரத்தினசிங்கம் — நீர்வேலி வடக்கு (கோபபாய் கிறிஸ்தவ கல்லூரி.

★ முருகன் அனுஷா — அச்சுவேலி தெற்கு (நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை)

★ பரமநாதன் ரேவதி — ஆனைக்கோட்டை (கொட்டடி நமசிவாய வித்தி.)

★ செல்வானந்தி சோதிவேல் — கல்வியங்காடு (நல்லூர் தெற்கு விக்னேஸ்வரான வித்தி)

★ செல்லத்துரை சுகந்தினி — அச்செழு (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி)

★ சாரதாதேவி நாகலிங்கம் — ஆனைப்பந்தி (யாழ். இந்துமகளிர் கல்லூரி)

★ றோயிஸ் நேசரட்ணம் சிவபுத்திரன் — வவுனியா (முத்துத்தம்பி ம.வி.)

★ சிவலிங்கம் சிவதாசன்— தம்பாலை (நீர்வேலி றோ.க. த.க. பாடசாலை)

★ சண்முகம் அமுதா — கோண்டாவில் மேற்கு (கோண்டாவில் இ.த.க.)

★ தம்பிராசா சிவகுமார்— நாவலர் வீதி, நல்லூர் (நல்லூர் இ.த.க. பாடாாலை)

★ ஜெயப்பிரியா யோகராசா — கோண்டாவில் மேற்கு (கொக்குவில் மேற்கு இ.த.க.)

★ துஷ்பா மணிவாசகன் — கோப்பாய் தெற்கு (கோப்பாய் வடக்கு றோ.க.த.க.)

★ கல்யாணி சத்தியவான் — உரும்பிராய் தெற்கு (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி)

### தீவகம்

கல்வியியற் கல்லூரிகளில் டிப்ளோமா கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்த 12 ஆசிரியர்களுக்குத் தீவக வலயப் பாடசாலைகளில் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நியமனம் பெறுவோர் விவரம் வருமாறு:-

சதாசிவம் சதானந்தன் (நவாலி தெற்கு), பாலகிருஷ்ணன் குணாகரன் (இடைக்காடு), அருளையா அதிசயராஜா (நவாலி தெற்கு), குணராஜா கந்தரூபன் (இணுவில் தெற்கு), கணேஷ் சுகந்தினி (கொழும்புத்துறை).

சிவானந்தம் சிவகரன் (கோண்டாவில் மேற்கு). சின்னப்பு சதீஷ் (அளவெட்டி தெற்கு.) பாலகிருஷ்ணன் கோபிரமணி (சுழிபுரம்மத்தி நாகலிங்கம் சதீஷ்கரன் (சுதுமலை தெற்கு). ஆனந்த ஜயேந்திரன் றஜீவன் (தாவடி தெற்கு). மகாதேவன் முகுந்தன் (வட்டு வடக்கு), கலைவாணி சண்முகநாதன் (கொழும்பு).

மேற்குறிப்பிடப்பட்டவர்களை உடனடியாகவேலணையில் இயங்கும் தீவக வலயக் கல்வி அலுவலகத்துக்குச் சமுகமளித்து தமக்குறியநியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

(-7)

## தென்பகுதிக்குச் கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைச் சிறப்புக்கலை இறுதி வருட மாணவர் குழு ஒன்று நாளை வியாழக்கிழமை கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு நாட்டின் பல பகுதிகளுக்கும் செல்லவுள்ளது.

இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் மற்றும் மத ஸ்தலங்கள், உட்பட முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் சகல இடங்களுக்கும் 20 நாள் சுற்றுப் பயணமாக செல்லவுள்ள இவர்கள் நாளை கப்பலில் இங்கிருந்து பயணமாகின்றனர்.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் முதற் தடவையாக இந்துநாகரிகத் துறை மாணவர்கள் இம்முறை தான் கல்விச் சுற்றுலாவாக தென்பகுதிக்குச் செல்லவுள்ளனர்.

(ஐ-6-ரி)

**உதயவாக்கு**

உன்னை ஒருவன் இருமுறை ஏமாற்றினால் அது உன்னுடைய குற்றம்.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணம் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2.00 மணி முதல் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ 15 வயது — புனித பரியோவான் எதிர் யாழ். சென்றல்.

★ 17 வயது — புனித பரியோவான் எதிர் புனித பத்திரிசியார்.

★ 19 வயது— யாழ். சென்றல் எதிர் புனித சாள்ஸ்.

★ 19 வயது — புனித பரியோவான் எதிர் புனித ஜோசப். (ஐ-3)

★ ★ ★

பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ புனித ஜேம்ஸ் எதிர் புனித மரியாள்.

★ யாழ். சென்றல் எதிர் புனித சாள்ஸ் (ஐ-3)

## புளொட் அனுதாபம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

கடந்த ஞாயிறன்று காலமான வலி. தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினர் (புளொட்) செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உடுவில் மற்றும் நல்லூர் பிரதேசச் செயலாளரும் இந்து சமயப் பேரவையின் உப தலைவருமான ஆர். மகாலிங்கத்தின் மறைவால் சைவத்தமிழ் மக்கள் அனைவருமே அதிர்ச்சியடைந்து சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்துள்ளனர்.

யுத்த காலங்களில் அன்னார் ஆற்றிய சேவை எமது மக்களின் மனதிலிருந்து என்றும் நீங்காது. சைவத்துக்கும் தமிழுக்கும் பாதுகாவலராக இருந்து பொதுநலனே தனது குறிக்கோளாகக் கொண்டு அவர் மக்களுக்கு ஆற்றிய சேவையை என்றுமே மறக்க முடியாது.

அன்னாரின் பிரிவால் தவிக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம் — என்றுள்ளது.

(க-7)

## தென்மராட்சி அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி, மார்ச் 14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை பி.ப 2 30 மணிக்கு வலிகாமத்திலும், வடமராட்சியிலும் நடைபெறவுள்ளது.

வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய வலயங்களின் உள்ள தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் உள்ள சாவகச்சேரி கல்விக் கோட்ட அலுவலகத்திலும் —

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதி அதிபர்களுக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இயங்கும் வலயக்கல்வி அலுவலகத்திலும்—

கூட்டம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஐ-117)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளி/ வேம்பொடுகேணி சி- சி. த. க. பாடசாலையின் அதிபர்

**திரு. சின்னத்துரை இராமலிங்கம்**

B. A. (Cey) Dip In. Ed SLPS 2 - 1

அவர்கள் இலங்கை அதிபர் சேவையின் 2-1 ற்கு பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு. திருமதி சோதியானந்தன்,
திரு. திருமதி முருகையா.

முகமாலை. (85362)

---

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்
இல. 30, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.

# பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி கூட்டம் 16-03-2001 வெள்ளிக்கிழமை
புதிய நேரம் 9-30 மணிக்கு சங்கப் பணிமனையில்
தலைவர் திரு. சி. அ. சிவலிங்கம்
தலைமையில் நடைபெறும்.

முக்கிய குறிப்பு:- அன்றைய தினம் ஒப்பனை நிலையங்களை முழுமையாக மூடி உரிமையாளர், தொழிலாளர், கிராமியத் தொழிலாளர் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி!

சி. பாலசந்திரன்
செயலாளர்

விளம்பர அன்பளிப்பு:-

லிங்கம் சலூன்
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.
நியூ தேவி சலூன்
ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.

(85306)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் வைத்திலிங்கம் துரையப்பா

மலர்வு 03-10-1930 உதிர்வு 12-02-2001

என்றென்றும் எங்கள் நெஞ்சை விட்டு
அகலாத குலவிளக்கே!
எங்களுக்கு வழிகாட்டிய பாசத்தின் ஒளி விளக்கே!
எங்களை நல்வழியில் வாழ வழிகாட்டி வைத்த
அன்புத் தெய்வமே!
உங்கள் நினைவுகள் என்றென்றும்
எங்கள் உள்ளத்தில் நிலைத்து நிற்கும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்னாரின் மரணச் செய்தியை அறிந்து எங்கள் துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (14-03-2001) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

''கண்ணன் பந்தல் சேவை''
வீரபத்திரர் கோயிலடி,
மல்லாகம். (சி/15663)

---

# வசந்த மண்டப கலச அபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையார் கோயில் அந்தரீகப்பிரதிஷ்டா கும்பாபிஷேகமும், புதிய வசந்த மண்டப கலச ஸ்தூபி அபிஷேகமும், புதிய யாகமண்டப அபிஷேகமும் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

இதனை ஒட்டிய கிரியைகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணி முதல் நடைபெறவுள்ளன. (ஐ)

# கட்டாக்காலி நாய்களை அழிக்கக் கோரிக்கை

வடமராட்சி, மார்ச் 14

அல்வாய் மேற்குப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளதால் அவற்றைப் பிடித்து அழிக்குமாறு திக்கம் மத்திய சனசமூக நிலையம் பருத்தித்துறை பிரதேச சபைக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

கட்டாக்காலி நாய்களின் தொல்லையினால் உள்ளூர் வாசிகளும், வெளியிடங்களிலிருந்து வந்து செல்வோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அக்கோரிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ம-173)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, மார்ச் 14

வலிகாமம் கல்வி வலய உடுவில் கோட்டப் பாடசாலை அணிகளிடையேயான மென்பந்து துடுப்பாட்டப் போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் இன்று புதன்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

(ம-86)

★ ★★

வலி. வடக்கு, மார்ச் 14

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:

உடுவில் ஞானப்பிரகாசர் வி. க. எதிர் கொக்குவில் வராகி வி. க. (ம-86)

★ ★ ★

வலி வடக்கு, மார்ச் 14

வலிகாமம் கல்வி வலயக் கோட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளிடையே நடைபெற்று வரும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை வியாழக்கிழமை காலை 8. 30 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**17 வயதுப் பிரிவு**

★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

★ சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம் எதிர் யூனியன் கல்லூரி.

★ சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயம் எதிர் சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்.

★ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

★ யூனியன் கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.

★ சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம் எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

★ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் மல்லாகம் மகா வித்தியாலயம்.

(ம-86)

---

# விஞ்ஞான பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கு

எமது ''We are going party'' எதிர்வரும் 17—03—2001 சனிக்கிழமை காலை 9. 30 (SLT) மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் அனைத்து சக மாணவர்களையும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- நிகழ்ச்சி தருவதற்கு விரும்புவோர், பாட விரும்புவோர் நாளை (15-03-2001) வியாழக்கிழமை காலை 9. 00 மணிக்கு மாணவர் பொது அறைக்கு வருமாறு அழைக்கின்றோம்.

The Organizing Committee
of
"We are going"

(85379)

---

வளன்புரம், கொழும்புத்துறை

# புனித சூசையப்பர் ஆலய வருடாந்தப் பெருவிழா

**[16 - 03 - 2001 – 19 - 03 - 2001]**

( புனித சூசையப்பரே! எங்கள் அவசரங்களில் உம்மண்டை ஓடிவந்தோம் )

16 - 03 - 2001 — 18 - 03 - 2001 கொடியேற்றத்துடன் விழா ஆரம்பமாகி திரிதின ஆராதனைகள் தினமும் மாலை 4.30மணிக்கு திருச் செபமாலையுடன் நடைபெறும்.

18 - 03 - 2001 — நற்கருணை வழிபாடும்,

19 - 03 - 2001 — பெருவிழாத் திருப்பலி காலை 7மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து புனிதரின் திருச் சொரூப பவனியும், ஆசிரும் இடம்பெறும்.

புனிதரின் அருளாசி பெற அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

பங்குத் தந்தையும்,
இறை மக்களும்.
( வளன்புரம் )

(85389) (யாவும் புதிய நேரப்படி)

---

# உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் (வ/து) கேள்விக்கூறு கோரல்

பின்வரும் வேலைகளை மேற்கொள்வதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து கேள்விக்கூறுகள் கோரப்படுகின்றன.

01. அரிசி ஆலைக்கு நெல் அவிக்கும் தொட்டி 96'' X 48'' X 64'' அளவில் ¼'' எம். எஸ். இரும்புத் தகட்டில் செய்து சங்கத்திற்குக் கொண்டு வந்து வழங்கல்.

02. 200 இரும்புக் கதிரைகளுக்கு கறள் நீக்கி, அன்ரிகுறோஸ் அடித்து, பெயின்ற் அடித்து பெயர் பொறித்தல். இயந்திர மூலம் பெயின்றை அடிப்பதாயின் பிறைமர் அடித்து பெயின்ற் அடிக்க வேண்டும்.

விண்ணப்பத்தில் விவரம் குறிப்பிடவும்.

மேலதிக விவரங்களை சங்கத்தில் பெற்றுக்கொள்ளவும். கேள்விக்கூறுகளை 23 — 03 — 2001 ஆம் திகதி பிற்பகல் 4-30 மணிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,
உடுப்பிட்டி.

13—03—2001. (சி-15703)

---

# ஆழ்ந்த அனுதாபம்

குப்பிளானைப் பிறந்த இடமாகவும்,
திருநெல்வேலியைப் புகுந்த இடமாகவும் கொண்ட

**உயர்திரு. ஆ. மகாலிங்கம்**

(பிரதேச செயலர், மேலதிக அரசாங்க அதிபர் உடுவில்)

அவர்களது மறைவுச் செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியும், ஆழ்ந்த வேதனையும் அடைகின்றோம்.

அன்னாரின் மறைவு எமது கிராம மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். எமது கிராமத்தின் பற்றுக் காரணமாக சிறுவயதிலிருந்து சகல மட்டங்களிலும் தன்னாலான ஆகக்கூடிய பணிகளைச் செய்து குறிப்பாக ஆலயங்கள், பாடசாலை, சனசமூக நிலையம், விளையாட்டு, கிராம அபிவிருத்திச்சங்கம், விவசாயம் போன்றவற்றின் மேம்பாட்டுக்கு உழைத்த இவர் மறையும் வரை மண்ணின் மைந்தனாக இருந்து அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளார். அன்னாருக்கு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குப்பிளான் மக்கள் சார்பில்
நண்பர்கள்.

(85388)

# இந்துக்கள் மீதான கொடுமைகளை எதிர்த்து உரத்துக் குரல் கொடுத்தவர்

## மகாலிங்கம் மறைவுக்கு இந்துசமயப் பேரவை அனுதாபம்

யாழ்ப்பாணம்,மார்ச்14

யுத்தத்தினால் இந்துக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு எதிராக உரத்துக் குரல் கொடுத்தவர் அமரர் மகாலிங்கம். அவரது மறைவு இந்துக்களுக்கும் இந்து சமயத்துக்கும் பேரிழப்பாகும்.

உடுவில் பிரதேச செயலர் ஆமகாலிங்கத்தின் மறைவு குறித்து யாழ். இந்து சமயப் பேரவை விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணியம் மிக்க நேர்மையான ஒரு வீர புருஷனை நமது மண் இழந்து விட்டது.

மக்கள் துன்பத்தை தன்துன்பமாகக் கருதும் பெருமகனின் இழப்பு நெஞ்சை உலுக்குகிறது.

தமிழ் இனம் அனைத்து உரிமைகளுடனும் வீரம்மிக்க இனமாக வாழவேண்டும் என்பதற்காக இவர் மேற்கொண்ட துணிச்சலான செயற்பாடுகளுக்கு உலகத் தமிழினம் தலை சாய்த்து அஞ்சலி செலுத்த வேண்டும்.

அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தவருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இந்து சமயப் பேரவை சார்பில் பிரார்த்திக்கின்றோம் - என்று அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சக சிப்பாயின் பணத்தை திருடியவர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை!


தென்மராட்சி,மார்ச்14

சக சிப்பாயின் பணத்தைத் திருடியதை விசாரணையின் போது ஒப்புக் கொண்ட பயிலுநர் சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படும் சம்பவம் அண்மையில் கிளாலி முன்னரங்க காவலரணில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறை பொல்கேன என்னும் இடத்தைச் சேர்ந்த ஏ.எம்.எஸ். அபயசேகரா என்னும் பயிலுநர் சிப்பாயே தற்கொலை செய்து கொண்டவராவார்.

இவரது மரணம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் சடலத்தை கொழும்புக்கு அனுப்பி கொழும்பு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரியினால் பிரேத பரிசோதனையையும், கொழும்பு நகர மரண விசாரணை அதிகாரியினால் மரண விசாரணையையும் மேற்கொள்ளுமாறும் உத்திரவிட்டார்.

சடலத்தின் நெற்றி, கன்னம், தொண்டை ஆகிய இடங்களில் காயங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)



திருநெல்வேலி கலாசாலை வீதியில் உள்ள ஒரு வீட்டில் ஆடு ஒன்று ஆறு குட்டிகளை ஈன்றுள்ளது. மூன்று கடாய் குட்டிகளையும், மூன்று மறிக் குட்டிகளையும் ஈன்று சாதனை படைத்த ஆட்டை குட்டிகளுடன் படத்தில் காணலாம். ஆறு குட்டிகளும் நல்ல ஆரோக்கியமான நிலையில் உள்ளன. (ஐ-6)

*(படம்: கொனிக்கா கலர் லாப்)*

## தெஹிவளைப் பகுதிவீட்டில் தற்கொலை அங்கிகள் மீட்பு!

கொழும்பு,மார்ச்14

தெஹிவளை பொலீஸ் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து தற்கொலைத் தாக்குதலுக்குப் பயனபடுத்தப்படும் அங்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அந்த வீட்டில் இருந்த நால்வர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து வேறு சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாக தெஹிவளைப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

தற்கொலைத் தாக்குதல் மூலம் கொல்லப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. கலாநிதி நீலன் திருச்செல்வம், அமைச்சர் சீ.வி. குணரத்ன ஆகியோரின் கொலைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட தற்கொலை அங்கிகள் இந்த இடத்தில் இருந்தே கொண்டு செல்லப்பட்டதாக ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாகக் கூறப்பட்டது. (ம)

## பணி செய்வோராய் மாறுவோம்!

"உங்களுக்கு முதன்மையாளராக இருக்க விரும்புகிறவர்
உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும்"

**15 ஆம் நாள்**

**தவக்காலச் சிந்தனை**

இன்று எத்திசை நோக்கிலும் போரும், பூசல்களும், சண்டை சச்சரவுகளும் தான். மனிதம் மறந்து விடப்பட்டுள்ளது. பழிக்குப்பழி வாங்கும் நிலை வளர்ந்து கொண்டுவருகின்றது. எங்கு பார்த்தாலும் நான் பெரியவன், நீ பெரியவன் என்ற சிந்தனைகள் தான். உலக இன்பங்களில் மூழ்கித் திழைக்க முற்படுகின்றோம். லஞ்சக் கொடுப்பனவுகளும் ஊழல்களும் தலை விரித்தாடுகின்றன. இதனால் எமக்குக் கிடைப்பது தான் என்ன? இவையெல்லாம் நிலைத்திருக்கக் கூடியவைகளா? சிந்திப்போம். எம் ஒவ்வொருவரிலும் நான் தான் பெரியவன் என்று எண்ணாமல் இருந்ததுண்டா? அல்லது அடுத்தவனை மட்டமாக எண்ணி குறைகூறாமலும் இருந்ததுண்டா? எமது சமூக வாழ்வில் இன்று நான் தான் பெரியவன் என்ற எண்ணத்தினாலும் ஆசையினாலும் பதவிகளுக்காக, பேருக்காக, புகழுக்காக, சிறுசிறு இன்பத்திற்காக தாறுமாறானவற்றைச் செய்கின்றோம். இதனால் எமக்கு கிடைத்தவைகள் தான் என்ன? இவையெல்லாம் நிலைத்திருக்கக் கூடியனவா? எனவே யேசுவின் பணிவாழ்வை நமக்கு மாதிரிகையாகக் கொண்டு எமது வாழ்வில் நான் பெரியவன் என்ற எண்ணத்தை விடுத்து அனைவருக்கும் பணிசெய்பவர்களாக மாறுவோம்!

**- ஓ.மேசி சுஜந்தினி**

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்14

யாழ்.பல்கலைக்கழக முதலாம் வருட முகாமைத்துவ மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

☆ ☆ ☆

தென்மராட்சி,மார்ச்14

யாழ்.மாவட்ட அரச திணைக்களங்களில் கடந்த 1994ஆம் ஆண்டு பட்டதாரிப் பயிலுநர்களாக இணைக்கப்பட்டு பின்னர் 1998ஆம் ஆண்டு ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்ட அனைத்து ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடல் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-117)

## திருக்குறள் மனனப் போட்டி

வலிகாமம்.தெற்கு,மார்ச்14

தரம் 4,5 மாணவர்கள் பங்குபற்றக்கூடிய திருக்குறள மனனப் போட்டி ஒன்று வலிகாமம் கல்வி வலயத்தில் நடைபெற உள்ளது.

இம்மாணவர்கள் திருக்குறளில் உள்ள முதல் 15 அதிகாரங்களையும் மனனம் செய்து ஒப்புவிக்க வேண்டும்.

கோட்டமட்டங்களில் இப்போட்டிகளை நடத்துவதற்காக இம்மாதம் 16ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பாடசாலையில் இருந்து மேற்படி தரங்களில் பயிலும் மூன்று மாணவர்கள் மட்டுமே போட்டியில் பங்குபற்ற முடியும். கோட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று போட்டியாளர்கள் வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்டுவர்.

வலிகாமம் வலய போட்டிகள் ஏப்ரல் 26ஆம் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (ம-182)

## போதனாசிரியர் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,மார்ச்14

தென்மராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப்பிரிவினால் நடத்தப்படவுள்ள தொழிற் பயிற்சிகளுக்கான போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சுருக்கெழுத்து, தட்டெழுத்து (தமிழும், ஆங்கிலமும்), சிகையலங்காரமும், ஒப்பனையும், உடையமைதல், விவசாய இயந்திரம் திருத்தல், வானொலி திருத்தல், வீட்டு மின்னிணைப்பு, தேனீ வளர்ப்பு, மோட்டார் சைக்கிள் திருத்தல், தட்டச்சு திருத்தல், படவரைஞர் ஆகிய பாடநெறிகளுக்கான போதனாசிரியர்கள் பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தென்மராட்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுகளை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் -

எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன் நெல்லியடி ம.வி.யிலுள்ள தென்மராட்சி கல்வி வலயத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கு மாறும் - வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ம-5)

## வாசகர் திருமுகம்

### குறிகாட்டுவான் பஸ்ஸில் "அடைக்கப்படும்" பயணிகள்!

யாழ் குடாநாட்டில் அதிக கட்டணம் அறவிடப்படும் பஸ் பாதை யாழ குறிகாட்டுவான் பஸ்பாதையாகும். ஆனால் மற்றைய பகுதிகளிற்கு விடப்படுகின்ற பஸ்களை விட குறைந்த பஸ்களே யாழ் குறிகாட்டுவான் பாதையில் சேவைக்கு விடப்படுவதுடன் அவை சரியாக இயங்குவதும் இல்லை. சில வேளைகளில் இடை வழியில் நின்றும் விடுகின்றன. இதனால் பிரயாணிகள் பெரும் சிரமமடைய வேண்டியுள்ளது.

நயினாதீவு நாகபூஷனி அம்பாள் ஆலயத்திற்கு தினமும் பெரும் எண்ணிக்கையான அடியவர்கள் யாத்திரை மேற்கொள்கின்றனர். குறிப்பாக செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் பெரும் எண்ணிக்கையான அடியவர்கள் நயினாதீவுக்கு யாத்திரையை மேற்கொள்கின்றனர்.

குறிப்பிட்ட நாள்களில் காலையில் இரு பஸ்கள் யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவானுக்கு செல்கின்றன. நயினாதீவு நாகபூஷனி அம்பாள் ஆலயத்தில் வழிபாட்டை முடித்து விட்டு மாலை யாழ் திரும்பும் பயணிகள் ஒரு பஸ்ஸில் ஏற்றப்படுகின்றனர் இல்லை என்பதை விட அடையப்படுகின்றனர் என்பதே உண்மையாகும்.

25-02-2001 ஞாயிற்றுக்கிழமை காலை பஸ்ஸில் நானும் நயினாதீவுக்குச் சென்றேன். குறிகாட்டுவானில் பஸ்ஸை விட்டிறங்கி நிற்க மேலும் ஒரு பஸ்ஸில் பயணிகள் வந்திறங்கினர். முதல் ஒரு படகிலும் அதன் பின் ஒரு படகிலும் பிரயாணிகள் நயினாதீவுக்கு ஏற்றிச் செல்லப்பட்டனர். நயினை அம்பாள் ஆலய வழிபாட்டை முடித்துக் கொண்டு மாலை இரண்டு மணிக்கு படகில் இரு தடவைகள் பிரயாணிகள் ஏற்றப்பட்டு குறிகாட்டுவானில் இறக்கப்பட்டனர். அங்கே ஒரு பஸ் தான் வழமைபோல நிறுத்தப்பட்டிருந்தது. அந்த பஸ்ஸில் பயணிகள் அனைவரும் சாக்கில் மிளகாய் அடைவது போல் அடையப்பட்டனர். நெரிசல் வெப்பத்தினால் கைக் குழந்தைகள் வீறிட்டழுது கொண்டிருந்தன. ஒருவாறு முழுப்பயணிகளும் அடையப்பட்ட பின் பஸ் புறப்பட்டு புங்குடுதீவை அடைந்ததும் பஸ் டீசல் அடைப்பால் நின்று விட்டது.

சாரதியின் முயற்சியால் டீசல் அடைப்பு எடுக்கப்பட்டு பஸ் புறப்பட்டாலும் வாரக் கடைசி பஸ் என்பதால் வழியில் நின்ற பயணிகளை ஏற்ற பஸ்ஸின் வேகத்தை சாரதி குறைக்க மீண்டும் பஸ் அடைப்பால் நின்று விட்டது.

இவ்வாறு வழிநெடுகிலும் பஸ் நின்று நின்று சாரதியின் பெரும் முயற்சியால் யாழ் நகரை மாலை 6.30 மணிக்கு பிரயாணிகள் வந்தடைந்தனர். வேலணைத் துறையிலும் அல்லைப்பிட்டியிலும் கூடுதலான பிரயாணிகள் இறக்கி ஏற்றப்படும் பொழுது அதுவும் பெரும் சிரமத்தை பிரயாணிகள் அடைகின்றனர்.

செவ்வாய், வெள்ளி, ஞாயிறு தினங்களில் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் வசதி கருதி காலையில் இரு பஸ் களை அனுப்பும் இ.போ.ச. அதிகாரிகள் மாலையில் திரும்பி யாழ் வர ஒரு பஸ்ஸைத் தான் அனுப்புகின்றனர்.

அந்த ஒரு பஸ்தான் காலையில் நயினாதீவு சென்ற அடியவர்களும் மற்றும் பிரயாணிகளும் அடையப்படுகின்றனர். குழந்தைகள் மூச்சுத் திணறி அவஸ்தைப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

கடல் பாலங்களால் பிரயாணம் மேற்கொள்ளப்படுவதால் அதிக பிரயாணிகளை ஏற்றுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

எனவே செவ்வாய், வெள்ளி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் குறிகாட்டுவானில் இருந்து மாலை இரு பஸ்கள் சேவைக்கு அமர்த்தப்பட வேண்டும்.

இது சம்பந்தமாக வட பிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள் உடனடிக் கவனம் எடுக்க வேண்டும் என்று வேண்டுகின்றேன்.

*யாழ்ப்பாணம்.* **- நயினை நா.கோபாலகிருஷ்ணன்**

### 'படிவம்' கிடைக்காதுபோய் பட்டத்தை இழக்கலாமா?

பல்கலைக்கழகஅனுமதிக்கான முதலாவது படிவம்,பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றோருக்கு இலவசமாக அனுப்பும் நடைமுறை முன்னர் இருந்து வந்தது. இந்த நடைமுறை மாற்றப்பட்டு, இப்படிவங்கள் தனியார் புத்தக நிலையம் மூலமாக விற்கப்படும் நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது பல சிக்கல்களை தோற்றுவித்துள்ளது.

போதிய படிவங்கள் இப் புத்தகசாலையில் இல்லாததால், பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற பலர் அதற்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பை இழக்கின்றனர். இந்நிலை மாறவேண்டும்.

முன்னர் இருந்த நடைமுறை மீண்டும் கொண்டுவரப்பட்டுப், பல்கலைக்கழக அனுமதிக்கான முதலாவது விண்ணப்பப் படிவம் இலவசமாக, அனுமதிக்குத் தேவையான புள்ளிகளைப் பெற்ற அனைவருக்கும் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

பாடுபட்டுப்படித்தோர் படிவம் இன்மையால் பல்கலைக்கழகத்தில் கல்விபெறும் வாய்ப்பை இழக்க அனுமதிக்கமுடியுமா? முடியாது.

*திருநெல்வேலி.* **- ச.ஆ.கோபாலமூர்த்தி**

### கோயில்களும் ஒலிபெருக்கியும்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற எமது முன்னோரின் முதுமொழியை "கோயில் உள்ள ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று மாற்ற வேண்டிய நிலைக்கு நாம் வந்திருக்கிறோம். அதற்கு ஒரு காரணம் ஒலிபெருக்கி உபயோகம். அவசியமில்லாமல் ஒலிபெருக்கியை கோயில்களில் உபயோகிப்பதன் மூலம் அன்றாடம் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் ஏராளம்.

அதிகம் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்களும், நோயாளிகளும்.

இதை அறிந்து கொண்டும் இதற்குக் காரணமாக இருப்பவர்கள் சட்ட நடவடிக்கை வராது என்ற துணிவில் மக்களுக்குத் தொடர்ந்து துன்பமிழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதே போல் கோயில்களில் காணப்படும் வேறு பல குறைகளையும் நீக்குவதற்கு பொது நலன் விரும்பிகள் புத்திஜீவிகள் கோயில்களில் ஈடுபாடு காட்ட வேண்டும்.

கோயிலைக்கட்டி அழகாக நிறங்கள் தீட்டிக் கிரியைகள் செய்தால் மட்டும் சமயம் நிலைத்து நிற்கும் என்று எண்ணும் குருமாரும், பொது நோக்கோடும் கோயில்களில் ஈடுபடும் நிலை வரவேண்டும்.

பேரோங்கு எம்மூரின் மருகராய் வாய்த்தவரே!
பாரோங்கு நம்பெரியார் பெருமைக்காய் உழைத்தவரே!
நீரோங்கு இவ்வுலகில் நிலைபெற்று துணையுடனே
பல்லாண்டு
சீரோங்கி வாழ சிறப்புடனே வாழ்த்துகின்றோம்!

நம் நற்றமிழ்ப் பேராசிரியரும், அவர் தம் அன்புத் துணைவியாரும் நலமொடு பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்காய் மேன்மேலும் பல பணிகளாற்ற, மாலந்தெணி விநாயகரின் அடிபணிந்து மனதார வாழ்த்துவதில் அகமிக மகிழ்கின்றோம்.

**மேலைப்புலோலி சதாவதானி**
**கதிரைவேற்பிள்ளை**
**சனசமூக நிலையத்தினர்.**

தம்பசெட்டி,
பருத்தித்துறை.

(85315)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 14

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ம-10)

உ
ஓம் கற்பகப் பிள்ளையார் துணை

## திருமண அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனித் திங்கள் 2ஆம் நாள் (15.03.2001) வியாழக்கிழமை நண்பகல் 12 மணி 30 நிமிடம் முதல் 2 மணி 15 நிமிடம் வரையுள்ள அனுஷ நட்சத்திரமும், சஷ்டி திதியும், சித்தயோகமும், மிதுன லக்கினமும் கூடிய சுப வேளையில்,

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
**விஜயகாண்டீபன்**
அவர்களுக்கும்



எமது புதல்வி
திருநிறை செல்வி
**கிருஷாந்தி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணையுடன் திருமாங்கல்ய தாரண வைபவம் பெரியோர்கள் ஆசியுடன் நடைபெறும் என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

திருமணவைபவம் நடைபெறும் இடம்:

**மருதானை கப்பித்தாவத்தை விநாயகர் கோயில் திருமண மண்டபம்**

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி கருணாகரன் குடும்பத்தினர்,
திரு.திருமதி இராதாகிருஷ்ணன் குடும்பத்தினர்.
**187 'A' Merton Road,**
**South Wimbledon,**
**London.S.W.19...EE.U.K.**
**Tel. 0044208-3958177.**

திரு.திருமதி மகேஸ்வரன் குடும்பத்தினர்,
திரு.திருமதி மகேந்திரன் குடும்பத்தினர்,
குணநாதன் சிறீதரன்,
இந்துக் கல்லூரி வீதி, உரும்பிராய் வடக்கு.
**28E, 8th Lane Colpetty,**
**Colombo - 03.**
**Tel:580399**

(84861) *(இரு வீட்டார் அழைப்பு)*

# சாவகச்சேரி நகரில் உள்ள இரு ஆலயங்கள் பெரும் சேதம்

சாவகச்சேரி நகரப் பகுதியில் டச்சு வீதியில் உள்ள செருக்கல் பிள்ளையார் ஆலயம், ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலயம் ஆகியவை ஷெல் வீச்சுக்களுக்கு இலக்காகி பலத்த சேதங்களுக்கு உள்ளாகி இருப்பதாக அங்கு சென்று திரும்பிய சாவகச்சேரி நகர கிராமஅலுவலரும் இவ் ஆலயங்களின் பரிபாலன சபைத் தலைவருமான வை.இராசரத்தினம் தெரிவித்தார்.

செருக்கல் பிள்ளையார் ஆலயத்தில் வசந்தமண்டபம், மகா மண்டபம், மடப்பள்ளி, தேர்முட்டி ஆகியவையும, ஸ்ரீ பழநிஆண்டவர் ஆலயத்தில் மண்டபம், மடப்பள்ளி, மணிக்கூட்டுக் கோபுரம் ஆகியவையும் ஷெல் குண்டுகளால் பலத்த சேதமடைந்துள்ளதாகவும், இரு ஆலயங்களின் மூலஸ்தானங்களும் சேதமின்றிக் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ம-117)

உ
சிவமயம்
முத்துமாரி அம்பாள் துணை

**காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி**

**அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய**

## மண்டலபூர்த்தி சங்காபிஷேக விழா விஞ்ஞாபனம்

**14-03-2001**



**அம்பிகை அடியார்களே!**

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனி மாதம் முதலாம் நாள் (14-03-2001) புதன்கிழமை பகல் 11 மணியளவில் அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவாரமூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

### கிரியாகால நிகழ்ச்சிகள்

13-03-2001:- விக்கிரம வருடம் மாசி மாதம் 29 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு அனுக்ஞை முதலிய பூர்வாங்கக் கிரியைகள் சங்குஸ்தாபனம்.

14-03-2001:- விக்கிரம வருடம் பங்குனி மாதம் முதலாம் நாள் புதன்கிழமை காலை 7.00 மணிக்கு விநாயக வழிபாடு, பேரீதாடனம், சூர்ணபூசை, யாகசங்கு பூசைகள், திரவ்யாபிஷேகம், சங்க விஷேட பூசை, சங்கு உத்தாபனம், அபிஷேகம்,திருமஞ்சனக்கிணற்றில் தீர்த்தம், மூலமூர்த்திகள் பூசை.

உற்சவம்:- இரவு 8.00 மணிக்கு அம்பாள் திருவீதியுலா நடைபெறும்.

சர்வபோதகம்:- பிரதிஷ்டா வித்வஜோதி சிவஸ்ரீ **இ.சுப்பிரமணியக் குருக்கள்** (அரியாலை)

சர்வசாதகம்:- சிவஸ்ரீ **தா.மகாதேவக்குருக்கள** (இணுவில்)

பிரதம குரு:- சிவஸ்ரீ **சு.முரளிதரக்குருக்கள்** (அரியாலை)

தேவஸ்தானக் குரு:- சிவஸ்ரீ **கு.சண்முகராஜக்குருக்கள்** (காரைநகர்)

மங்கள இசை:-
அளவையூர் கலாநிதி திரு.N.K.பத்மநாதன் குழுவினர்,
இணுவில் கலாபூஷணம் திரு .K.R.சுந்தரமூர்த்தி குழுவினர்,
காரையம்பதி கானவாரிதி திரு.N.K.கணேசன் குழுவினர்,
திரு. அ.மந்திரமூர்த்தி குழுவினர்.

★ நண்பகல் அன்னதானம் வழங்கப்படும். ★ கும்பாபிஷேக மலர் வெளியீட்டு வைபவம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்) தலைமையில் நடைபெறும்.

அம்பிகை அடியார்கள் அனைவரையும் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

**- ஆலய அறங்காவலர் சபையினர்.**

*காரைநகர்.* (85322)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினரும் கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையின் அதிபருமாகிய**

**திரு.சி.இராமலிங்கம்**

அவர்கள் இலங்கை அதிபர் தரம் 2-I இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளமையைப் பாராட்டுவதோடு இவரது கல்விப்பணி மேன்மேலும் சிறப்புற்றுப் பயனடைய வாழ்த்துகின்றோம்.

பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்,
பளை.

**தலைவர்,**
**பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள்.**

(C/15675)

# P. I. பணாண்டோ

பல் கட்டுபவர்கள்
கண்பரிசோதித்துக்கண்ணாடிவழங்குபவர்கள்
மிதப்புப் பற்களுக்கு கிளிப் போடுபவர்கள்

P. I. பணாண்டோ

பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, (கலைஞானி கலைக்கூடத்திற்கு அருகில்).
237, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Prop. E. Surendran

(சி/15696)



## சுன்னாகம் பல நோ.கூ. சங்கம்(வ-து)
சுன்னாகம்

## அடிப்படை மனைப் பொருளியல் பயிற்சி நெறி - 2001

முடிவு திகதி நீடிப்பு

மேற்படி பயிற்சி நெறிக்கு 26.02.2001 ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட விண்ணப்ப முடிவு திகதி 24-03 2001 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களில் மட்டுமே விண்ணப்பிக்கவும், ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

-பொது முகாமையாளர்.

காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.
[சி/15697]



## கண்ணீர் அஞ்சலி

உடுவில் [பிரதேச செயலரும், நல்லூர் பதில் பிரதேச செயலரும், யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் உப தலைவருமான

### ஆறுமுகம் மகாலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
(சி/15699) பிரதேச செயலகம், கரவெட்டி.



## கண்ணீர் அஞ்சலி

உடுவில் பிரதேச செயலரும்
நல்லூர் பதில் பிரதேச செயலருமாகிய

### ஆறுமுகம் மகாலிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரது பிரிவால் துயரடைந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபரும்,
நலன்புரிச் சங்க உறுப்பினர்களும்.

தீவகம் வடக்கு,
ஊர்காவற்றுறை.

(சி/15705)



## கண்ணீர் அஞ்சலி

வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலரும்
வேலணை முன்னாள் உதவி அரசாங்க அதிபரும்
யாழ்ப்பாணம் இந்து சமயப்பேரவையின் உப தலைவரும்
சிறந்த இந்து சமயப் பற்றாளருமான

### ஆறுமுகம் மகாலிங்கம்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரம் அடைந்தோம். அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
நலன்புரிக்கழக உறுப்பினர்களும்.

பிரதேச செயலகம்,
தீவுப்பகுதி தெற்கு,
வேலணை.

(85355)


## தூண்கள் நட்டு நீண்டகாலமாகியும் மின்சாரம் இல்லை

வடமராட்சி, மார்ச் 14

கெருடாவில்பகுதிக்குதூண்கள் நட்டப்பட்டு இரண்டு வருடங்களாகியும், இப் பகுதிக்கு மின் வழங்கப்படவில்லை.

இப் பகுதிக்கு விரைவில் மின் வழங்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கெருடாவில் கலையரசி சனசமூக நிலையம் வடபிராந்திய மின் அத்தியட்சகரைக் கேட்டுள்ளது. (ம-173)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 14

அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற யாழ். மத்திய மாவட்ட சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரையும் ஆணையாளர் அருந்தவராசாவையும் பாராட்டிக் கௌரவிக்கும் விழா எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3-00 மணிக்கு திருநெல்வேலி அரசினர் விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறும். (ம)

## பாலர் பாடசாலை முற்றாகச் சேதம்

தென்மராட்சி, மார்ச் 14

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையில் அண்மையில் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புவேந்தன் பாலர் பாடசாலை, பாலர் பகல் பராமரிப்பு நிலையம் ஆகியவற்றின் கட்டடம் ஷெல் வீச்சுக்கு இலக்காகி முற்றாக சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலையில் சேதமடையாமல் தப்பிய சிறுவர்களுக்கான தளபாடங்கள் மீட்டு வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## சைக்கிள் உரிமத் தகடு

வடமராட்சி, மார்ச் 14

பருத்தித்துறை பிரதேச சபையினால் இவ்வாண்டுக்கான சைக்கிள் உரிமத் தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சபையின் புலோலி உப அலுவலகத்தில் வைத்து இத் தகடுகள் விற்பனை செய்யப்படுகின்றன. (ம-173)

## இலவச விவசாயப் பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். குடாநாட்டின் விவசாய உற்பத்திகளை அதிகரித்து விவசாயிகளின் வளங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் யாழ். மாவட்ட விவசாயிகளுக்காக விவசாயச் செய்கையை மையமாகக் கொண்ட நவீன தொழில் நுட்பங்களை உள்ளடக்கிய விவசாயப் பயிற்சி வகுப்புகள் திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் ஒவ்வொரு மாதமும் இலவசமாக இடம் பெற்று வருகின்றன.

அந்த வரிசையில் இந்த மாதத்துக்கான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9 30 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பழமரச் செய்கையில் கத்தரித்தல், வடிவமைத்தல், பராமரித்தல் போன்ற விடயங்களைக் குறித்து செய்முறைப் பயிற்சிகளுடன் வகுப்புகள் நடைபெறவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியருடன் தொடர்பு கொண்டு தங்கள் வருகையை உறுதிப்படுத்துமாறும் உதவி விவசாயப் பணிப்பாளர் ச. சின்னத்துரை கேட்டுள்ளார். (ம-5-9)


## இதய அஞ்சலி

வலி. தெற்கு பிரதேச செயலரும்,
யாழ். இந்து சமயப் பேரவையின் உபதலைவரும்,
சிறந்த சமயப்பற்றாளருமான

### ஆறுமுகம் மகாலிங்கம்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம். அவரது பிரிவால் வாடும் குடும்பத்தாரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா ஈசன் பாதத்தில் சாந்தியடைய இறையாசியை வேண்டி நிற்கின்றோம்.

யாழ். காங்கேசன்துறை [769]
சிற்றூர்திச் சேவைச் சங்கம்,
(85390) தெல்லிப்பழை.



## நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்

♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠

### உயர்திரு. பெரியதம்பி கனகரத்தினம்

யாழ். கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத் தலைவராகவும், கூட்டுறவு ஊழியர்களின் உரிமைகளுக்காகவும், கூட்டுறவின் வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்ட சாதனையாளரும், சிறந்த பேச்சாளரும், சங்கானை ப.நோ.கூ. சங்கத்தின் பொது முகாமையாளராகவும் இருந்து ஓய்வு பெற்ற மணிவிழா நாயகன் உயர்திரு. பெரியதம்பி கனகரத்தினம் அவர்களைப் பல வளமும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
கட். நெல். ப.நோ.கூ.சங்கம்.

(சி/15704)





## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

## கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

நயினாதிவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயிலுக்குக் கணக்காளர் தேவைப்படுகின்றார். தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:-**

B. B. A அல்லது B. Com அல்லது இணையான பட்டம் பெற்றவர்கள் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் கணக்கியல் சான்றிதழ் பெற்றவர்கள் (தொழில் நுட்பக் கல்லூரி, திறந்த பல்கலைக்கழகம், பட்டயக் கணக்காளர் நிறுவனம் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்).

அல்லது

க. பொ. த. உயர்தர வணிகப் பிரிவில் சித்தியும் கட்டமைப்புச்சார் நிறுவனத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய (குறைந்தது மூன்று வருட) அனுபவமும்.

**சம்பளம்:-**

ஆறாயிரம் (6000/-) ரூபா முதல் தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
(தங்குமிட வசதி்ள் செய்து தரப்படும் )

**வயதெல்லை:-**

21 வயது தொடக்கம் 65 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி:-**

31-03-2001 அன்று அல்லது அதற்கு முன் விண்ணப்பதாரி தனது சுயவிவரம் அடங்கிய விண்ணப்பத்தினை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கோயில் காரியாலயத்தில் சேர்ப்பிக்கலாம்.

முடிவு திகதியின் பின் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

விண்ணப்பப்படிவம் அனுப்ப வேண்டிய முகவரி:-
கௌரவ செயலாளர்,
அறங்காவலர் சபை,
நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

இங்ஙனம்,
அன்னையின் சேவையில்
கனக. உருத்திரகுமாரன் B. A.
செயலாளர்
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(சி/15698)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு. இ. குலசிங்கம்

அதிபர், யா/ ஊரெழு கணேச வித்தியாலயம்)
அவர்கள் அதிபர் தரம் 2.1 ற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
(85350) ஊரெழு கணேச வித்தியாசாலை.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னப்பிள்ளை சின்னையா

'கலையகம்' வராத்துப்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி சின்னப்பிள்ளை சின்னையா நேற்று (13 — 03 — 2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்தர் சின்னையா அவர்களின் அன்பு மனைவியும், M. S. கந்தசாமியின்(டென்மார்க்) அன்புத் தாயாரும், திருமதி லூர்த்தம்மாவின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, செல்லத்துரை மற்றும் சுந்தரலிங்கம், இரகுநாதன், தங்கம்மா, பாக்கியம், ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலைமதி (ஜேர்மனி), கலைமகள் (டென்மார்க்), அருந்ததி (டென்மார்க்), கலைச்செல்வன் (டென்மார்க்), அகிலன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(13-03-2001) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
வ. தேவசகாயம்,
(கண்ணன் எலக்ரிக்கல் வேக்ஸ்,
சாரையடி).

'கலையகம்',
வராத்துப்பளை,
பருத்தித்துறை. (85395)

## திருமதி சுப்பையா பொன்னம்மா

சரசாலை விசுவர் வளவைச் சேர்ந்த திருமதி சுப்பையா பொன்னம்மா அவர்கள் 11-03-2001 லண்டனில் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற நீர்வேலி பூதத்தம்பி சின்னத்தம்பியும், சரசாலை காலஞ்சென்ற திருமதி சின்னத்தம்பி வாலாம்பிகையின் அன்பு மகளும், காலஞ்சென்ற நீர்வேலி உபதபால் அதிபர் சின்னத்தம்பி மாணிக்கவாசகரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற ஓய்வு பெற்ற பிரதம தபால் அதிபர் (P. M. G) கொழும்பு, சுப்பையா அவர்களின் மனைவியும், Dr. புவிராஜசிங்கம்(லண்டன்), திருமதி சிவலோகநாதன் மங்கையர்க்கரசி (கனடா), அவர்களின் தாயாரும், திருமதி S. புவிராஜசிங்கம் (லண்டன்), அவர்களின் மாமியாரும், Dr. சிவசோதி (லண்டன்), Dr. திருமதி சிவசோதி, சிவாணி(லண்டன்), Dr . நிமலன் (லண்டன்), சட்டத்தரணி செல்வி ஜெனனி (லண்டன்), பு. தயாபரன், மலர்மகள் (திருநெல்வேலி), பு. காண்டீபன் (லண்டன்), வே. ரவீஸ்வரன், சுதாசினி (சுவிஸ்), நீர்வேலியைச் சேர்ந்த கவிதா, விஜி, கண்ணன் ஆகியோரின் பேர்த்தியும், நீர்வேலி மா. புவனேந்திரன், திருமதி ம. அருந்ததி, மா. தெய்வேந்திரன், மா. குலேந்திரன், திருமதி ந. சரோஜினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19-03-2001 திங்கட்கிழமை காலை அவர்களின்இல்லத்தில்நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

76, Rating Lane
Barrow - in - Farness
Currbria, L.A 13, 9, LD,U.K.

தகவல்:
நீர்வேலி வடக்கு, மா. புவனேந்திரன்
நீர்வேலி. [மருமகன்] (85381)

## திருமதி அல்வீனம்மா பரமானந்தம் [பபா]

சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த திருமதி அல்வீனம்மா பரமானந்தம் (பபா) 12—03—2001 திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் இராயப்பு பரமானந்தம் (உரிமையாளர், ஆனந்தா ஸ்ரோர்ஸ், சில்லாலை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கிறகரி, மேரி மக்ரலீனின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராயப்பு, றோசம்மாவின் அன்பு மருமகளும், மேரி ஆன், லோறன்ஸ், எமிலியான், மரிஸ்ரெலா, எட்மன், நோமன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், எமில், இளியோபற்றா, ஜெய்சி, றொஜின், மேரிதிரேசபுஸ்பம், மேரியோசேப்பின், மேரிகில்டா, சங். சகோதரி ஜெம்மா (திருச்சிலுவை கன்னியர் மடம்), மேரி லீலா, கி. எ. பங்கிறாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பீற்றர், ஆரோக்கியநாதர், தார்சீசியஸ் (சின்னத்தம்பி) ஆகியோரின் அன்பு மருமகளும், அலெக்ஸ் பிலோமினாவின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15—03—2001) வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆராதனையின் பின் சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
இ. பரமானந்தம்
(கணவர்)

ஆனந்தா ஸ்ரோர்ஸ்,
சில்லாலை,
பண்டத்தரிப்பு. (85399)

# இன்றைய மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

நல்லூர் ஞானோதய வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லியங்காடு இலங்கை நாயகி அம்மன் ஆலய வீதி விளையாட்டுத் திடலில் அதிபர் சு. இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்வி பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் பூ. புலேந்திரராஜாவும் சிறப்பு விருந்தினராக முன்னாள் அதிபர் த. திருநாவுக்கரசுவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம-10)

★ ★ ★

வலிகாமம் தெற்கு, மார்ச் 14

உடுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1- 30 மணிக்கு அதிபர் இ. லோகேஸ்வரன் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய அதிபர் ச. சர்வேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் முன்னாள் அதிபர் செ. சோதிப்பெருமான் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(ம-152)

★ ★ ★

மானிப்பாய், மார்ச் 14

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் அதிபர் செ. குணபாலசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிபாளர் க. தனபாலசிங்கம் பிரதம விருந்தினராகவும், நவாலி மகாவித்தியாசாலை அதிபர் அ. அலெக்சாண்டர் சிறப்பு விருந்தினராகவும் ஓய்வு பெற்ற அதிபர் இ. வல்லிபுரம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

(ம-90)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பட்டப்பின் கல்வித் துறைக்கமைக் கற்கை நெறி
(முழுநேரம்/ பகுதிநேரம்)

## 2001-பருவம் I இறுதித் தேர்வு

மேற்படி தேர்வு 2001-03-19 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. அனுமதி அட்டைகளைத் தேர்வு நாடிகள் பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் 2001-03-15 ஆம்திகதி பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்
(சி/15706)

# கண்ணீர் அஞ்சலி

உடுவில் பிரதேச செயலர்

## ஆ. மகாலிங்கம்

அவர்களின் திடீர் மறைவுக்கு எனது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

கா. சந்திரராசா
இளைப்பாறிய பிரதேச செயலர்,
சங்கானை.

(சி/15710)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் ஆறுமுகம் மகாலிங்கம்

(பிரதேச செயலர் - வலி. தெற்கு உடுவில், பதில் பிரதேச செயலர் நல்லூர், உப தலைவர் இந்து சமயப் பேரவை யாழ்ப்பாணம்.)

அன்னாரின் திடீர் மறைவு கேட்டு ஆறாத்துயர் அடைகின்றோம். அவரின் தன்னலமற்ற சேவை குடாநாட்டுமக்களின் நினைவில் என்றும் நிலைத்திருக்கும். அவரைப் பிரிந்து துயருறும் குடும்பத்தவர்களுக்குஎமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

டாக்டர் ம. சந்திரசேகரமும்.
சக உத்தியோகத்தர்களும்.

மத்திய மருந்தகம்,
சுன்னாகம். (85397)

# கண்ணீர் அஞ்சலி

## ஆறுமுகம் மகாலிங்கம்

(பிரதேச செயலர்- உடுவில்,
பதில் பிரதேச செயலர்- நல்லூர்,
உபதலைவர் யாழ் இந்துசமயப் பேரவை,
முன்னாள் தலைவர் கமநல சேவைக்குழு- உடுவில்)

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் மன வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயர் அடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

விவசாய சம்மேளனங்கள்,
சம்மேளனங்களின் சமாசம்,
கமநல சேவைக் குழு,
நிலைய உத்தியோகத்தர்கள்.

கமநல கேந்திர நிலையம்,
உடுவில். (85411)

# இதய அஞ்சலி

உடுவில் பிரதேச செயலரும்,
நல்லூர் பதில் பிரதேச செயலருமான

## அமரர் ஆறுமுகம் மகாலிங்கம்

அவர்களின் மரணச்செய்தி அறிந்து அதிர்ச்சியும் மிகுந்த மனவேதனையும் அடைகின்றோம். அவரது மறைவினால் துயருறும் அவரது அருமை மனைவி, அருமை மகன் மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி ஆணையாளரும்.
உத்தியோகத்தர்களும்,
கமநல சேவைகள் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
நல்லூர் கமநல கேந்திர குழு
உறுப்பினர்கள்.

(95412)

# Jaffna Christian Union

## AN ECUMENICAL SERVICE

ON Thursday The 15Th March 2001
AT 11.30 a. m.
AT THE Cathedral Vaddukoddai

PREACHER

**Rev. Dr. Konrad Raiser**

Secretary General, World Council of Churches
and other officers of W. C. C.
Leader: Bishop S. Jebanesan
All are cordially invited.

Rev. N. J. Gnanaponrajah
Secretary - J. C. U.

Rev. A. A. Paul
President J. C. U. (85401)

## திருமகள் சனசமூக நிலையம்
### அராலி. வடக்கு

# திறப்பு விழா அழைப்பு

G.T.Z. நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட திருமகள் சனசமூக நிலையத்துக்கான பொதுக் கட்டடம் இன்று 14.03.2001 வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவரும் வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான என்.திரிலோகநாதன் அவர்களால் உத்தியோக பூர்வமாகத்திறந்து வைக்கப்படும்.

அராலி வடக்கு.

ச.இராஜேந்திரம்,
தலைவர்,
திருமகள் சனசமூக நிலையம்.

(C/15717)



# இதய அஞ்சலி

## அமரர் உயர்திரு. லயன்
# ஆறுமுகம் மகாலிங்கம்

(பிரதேச செயலர், வலி.தெற்கு, உடுவில்)

யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் பழைய மாணவர் சங்கத் தலைவரும், சுன்னாகம் லயன்ஸ் கழக மூத்த உறுப்பினரும், முன்னாள் தலைவருமாகிய அமரர் லயன் ஆறுமுகம் மகாலிங்கம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆறாத்துயரில் வாடுகின்றோம்.

அன்னாரின் பிரிவினால் தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

2A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

லயன் வி.எஸ்.சிவரத்தினம்,
வங்கி மதிப்பீட்டாளர்,
உத்தரவு பெற்ற மொழி பெயர்ப்பாளர்,
பழைய மாணவர்,
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

(85413)


## நூலகம் திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்14

புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு அமைவாக பொதுக்கல்வித் திட்டத்தை அமுல் செய்ய வசதியாக பெரிய புலம் மகாவித்தியாலத்தில் நூலகக்கட்டடம் இன்று திறந்துவைக்கப்படும்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை நூலகத்தைத் திறந்து வைப்பார். (க-3)

## மாணவர் ஒன்று கூடல்

யாழ்ப்பாணம்,மார்ச்14

புவியியலை ஒரு பாடமாகக் கொண்டு கல்வியைத் தொடரும் பொதுக்கலை, சிறப்புக்கலை மாணவர்களுக்கான விஷேட கலந்துரையாடல ஒன்று இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்பல்கலைககழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## தாய்சேய் நலன் 'கிளினிக்'குகள் இயங்கமாட்டா!

யாழ்ப்பாணம்,மார்ச்14

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் செயற்படும் தாய்சேய் நலன் கிளினிக்குகள் இன்று முதல் இயங்கமாட்டா என்று மாநகர சுகாதாரப்பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் மகப்பேற்று நிலையங்களில் அவசர தேவை இடம்பெறும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-3)

## பூதவுடல் அஞ்சலி நிகழ்வில் மாற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச்14

வலி.தெற்குப் பிரதேச செயலர் ஆ.மகாலிங்கத்தின் பூதவுடல் திட்டமிட்டபடி இன்று ஏழாலை, உடுவில்,குப்பிளான் ஆகிய இடங்களில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படமாட்டாது எனவும்-

அன்னாரின் இறுதிக்கிரியைகளை நடத்துவதற்கான திகதியை நிர்ணயிப்பதில் ஏற்படும்தாமதமே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க-7)


# கண்ணீர் அஞ்சலி



## திருமதி பரநிருபசிங்கம் பாக்கியம்

(P.R.P. சிங்கம், ஓவசியர்)

நேற்று (13-03-2001) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- நண்பர்கள்.

(85422)



# G.T.Z. நிறுவனத்தின் கிராமிய வீடமைப்பு உதவித்திட்டம்

# புதிய கட்டடத் திறப்பு விழா

(பாலர் பாடசாலையும் மாலைநேரக் கல்வி நிலையமும்)

இடம்: வட்டு முதலிய கோவிலடி, அம்பாள் சனசமூக நிலையம்.
காலம்: இன்று (14.03.2001) புதன்கிழமை மு.ப.10.00 மணி.
தலைவர்: திரு.சி.செல்வராசா அவர்கள். (நிலையத் தலைவர்)

### பிரதம விருந்தினர்கள்

- உயர்திரு.H.கல்பாக் (குழுத் தலைவர், G.T.Z)
- உயர்திரு.என்.திரிலோகநாதன் (தலைவர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை)
- உயர்திரு.நா.வேதநாயகன் (பிரதேச செயலர், சங்கானை)

### சிறப்பு விருந்தினர்கள்

- திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் (சமூக ஆற்றுப்படுத்துனர், G.T.Z)
- திரு.எஸ்.நவரட்ணராஜா (திட்ட இணைப்பாளர், G.T.Z)
- திரு.எஸ்.சிறீகாந்த் (பொறியியலாளர், G.T.Z)
- திரு.எஸ்.பரராஜசிங்கம் (பொறியியலாளர், G.T.Z)
- செல்வி.எஸ்.மது (நிர்வாகம், G.T.Z)
- செல்வி எஸ்.கீதா (நிர்வாகம், G.T.Z)
- திரு.எஸ்.நாகரத்தினம் (J/165 வட்டு தெற்கு கி.உ.)
- திரு.எஸ்.வாசவன் (உதவி சமூக ஆற்றுப்படுத்துநர், G.T.Z)
- திருமதி ம.தர்சினி (உதவி சமூக ஆற்றுப்படுத்துநர், G.T.Z)
- செல்வி எஸ்.நிர்மலா (உதவி சமூக ஆற்றுப்படுத்துநர், G.T.Z)
- செல்வன் தி.வசந்தன் (உதவி சமூக ஆற்றுப்படுத்துநர், G.T.Z)
- திருமதி எஸ்.மங்களாதேவி (கள இணைப்பாளர், G.T.Z)
- திருமதி எஸ்.ஜெயரஞ்சினி (கள இணைப்பாளர், G.T.Z)
- செல்வி மா.இரத்தினேஸ்வரி (கள இணைப்பாளர், G.T.Z)

திட்டப் பயனாளிகள், பொதுமக்கள், ஏனைய பொதுஅமைப்புக்கள் அனைவரும் வீடமைப்பு புதிய கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு நன்றிகள் பல கூறி வாழ்த்துரைகள் வழங்கி விருந்தினர்களைக் கௌரவிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பாள் சனசமூக நிலைய நிர்வாகமும், பொதுமக்களும்,
முதலியகோவிலடி, வட்டுக்கோட்டை.

(C/15718)


# மரண அறிவித்தல்கள்

## ஆசை இராசா

(சங்கானை, காளிகோயிலடி)

சங்கானை, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், மாதகலை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பில் வசித்து வந்த ஆசை இராசா நேற்று முன்தினம் (12-03-2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசை - அன்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிற்றம்பலம் - வள்ளிப்பிள்ளையின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கந்தசாமி (பிரபல வர்த்தகர்) யின் அருமைத் தந்தையாரும், பரமேஸ்வரனின் மாமனாரும், இராசசேகரம், குணசேகரம், ரவிசேகரம், சந்திரசேகரம், இராஜேஸ்வரி, ஞானசேகரம், ஜெகதீஸ்வரி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15-03-2001) வியாழக்கிழமை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இ.கந்தசாமி,
70/11, புதிய செட்டித் தெரு.
கொழும்பு - 13.
தொலைபேசி இல: 336758

தகவல்:
ச.திருநாவுக்கரசு
(பெறாமகன்)
காளிகோயிலடி,
சங்கானை.

(C/15714)

## திருமதி செல்வராசா அன்னலட்சுமி

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கு முட்டாஸ்கடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா அன்னலட்சுமி அவர்கள் நேற்று முன்தினம் (12-03-2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் அப்பாப்பிள்ளை செல்வராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சீனியர் - முத்துப்பிள்ளையின் அன்புக்கினிய மகளும், காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை - அம்மாப்பிள்ளையின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, வேலாயுதப்பிள்ளை, சுப்பிரமணியம், இரத்தினம் ஆகியோரின் பிரியமிகு ஏக சகோதரியும், துலலிங்கம் (கனடா, முன்னாள் சுந்தளாய் சீனி ஆலை பொறியியலாளர்), மகாலிங்கம் (முன்னாள் இ.போ.ச.பரிசோதகர்), சிவலிங்கம் (முன்னாள் கைத்தறி உற்பத்தி முகாமையாளர் - யாழ்.மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், கோண்டாவில்), நதிமணிதேவி (லண்டன்), நஞ்சணாதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தவமணிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), இரத்தினதேவி, காலஞ்சென்ற இராசகுமாரிஅம்மா (நெசவு போதனாசிரியை) மற்றும் கதிர்காமநாதன் (லண்டன், முன்னாள் பொறியியலாளர், ஊருக்குக் கூட்டுத்தாபனம் - அத்துருகிரியா), சர்வானந்தன் (முன்னாள் புகையிரத நிலைய அதிபர் - பளை) ஆகியோரின் அன்பு மாமியாரும், துளசியந்தி (ஜேர்மனி), சாந்தி (ஆசிரியை - திருகோணமலை), சுதர்சினி (கனடா), துவயந்தி (லண்டன்), ஜங்கரன் (லண்டன்), விஜிந்தா, விஜேந்திரன், சுபர்த்தா (கலைப்பிரிவு, மூன்றாம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்), சுஜேந்திரன் (க.பொ.த.உயர்தரம் 2002 மாணவன், யாழ்.மத்திய கல்லூரி), சுதாகரன் (விஞ்ஞான பீடம், இரண்டாம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்), ஜனனி (மாணவி, கிளிநொச்சி முருகானந்த மகாவித்தியாலம், விஞ்ஞானப் பிரிவு), செல்வகுமரன் (க.பொ.த. உயர்தர மாணவன், கணிதப்பிரிவு, கிளிநொச்சி முருகானந்த மகாவித்தியாலயம்), தீபன் (லண்டன்), சஜிராம் (மருத்துவ பீடம், லண்டன்), தர்சி (உயர்தர மாணவி, லண்டன்), வரதராஜன் (ஜேர்மனி), கிருபாலிங்கம் (ஆசிரியர் - திருமலை), பாஸ்கரன் (கனடா), விசாகேசன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விதுஜன், சாயபதி, கேசி, சாயித்ரா, சப்தமி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (15-03-2001) வியாழக்கிழமை முற்பகல் 9.00மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஜனனோதயம்",
செல்வராசா அவெனியு,
அம்மன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
செ.சிவலிங்கம்
(மகன்)

(85425)

# விசாரணைகளுக்குச் சமுகமளிக்க மேலும் 10 பேருக்கு அழைப்பு

காணாமற்போனோர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு என மேலும் 10 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகள் தற்பொழுது யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில நடைபெற்று வருகின்றன.

விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

✡ சுப்பிரமணியம் சுதாகரன் (காணாமற்போனவர்) 56, முள்ளி வீதி, அரியாலை. அழைக்கப்பட்டவர்கள்:- திருமதி கனகாம்பிகை, நெசவு ஆசிரியர், நல்லூர். திருமதி சுப்பிரமணியம் கமலாதேவி.

✡ துரைசிங்கம் குணசேகரம் (காணாமற்போனவர்) இல 138/1, குருநகர். - டக்ளஸ் பிரான்ஸிஸ்கா - இவரது தாயாரும்.

✡ சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்(காணாமற்போனவர்) 1126, செல்வநாயகபுரம், அச்சுவேலி - தங்கப்பிள்ளை சுப்பிரமணியம்.

✡ அரியகுட்டி ஜெயந்தன் (காணாமற்போனவர்) கோட்டைக்காடு, மல்லாகம் - சிவகுருநாதன் ரமணி.

✡ செல்வரத்தினம் பிரதீபன் (காணாமற்போனவர்) 56, ஆட்காட்டி ஒழுங்கை, அரியாலை. கதிரவேலு செல்வரட்ணம்-அவரது மனைவி,மகன்

✡ இராஜரட்ணம் அஜந்தன் (காணாமற்போனவர்) இல 29/5 புகையிரதநிலைய வீதி, புங்கன்குளம் - இராஜரட்ணம் சரஸ்வதி, கவிதா இராஜரட்ணம், பரமநாயகம் ராப்பாத்தி குடும்பத்தினர்.

✡ ஜீவநாதன் மதியழகன் (காணாமற்போனவர்) இல 12, தொல்புரம் மேற்கு - தங்கையா ஜெயபாலையா, இவரது மகள், அரசரட்ணம் ஜெகதீஸ்வரி, அவரது கணவர், மகள்

✡ அந்தோனி திலகரட்ணம் (காணாமற்போனவர்) வேலணை வடக்கு, 6ஆம் வட்டாரம் - கதிரமலை கமலரட்ணம், இராமநாதன் கண்ணதாசன், செல்லத்துரை மயிலம்மையின் கணவர்

- ✡ சிதம்பரப்பிள்ளை பேரின்பநாதன் (காணாமற்போனவர்) நாவற்குழி வடக்கு-சிதம்பரப்பிள்ளை நாகேஸ்வரி, சிதம்பரப்பிள்ளை கௌரி, நடேசமூர்த்தி, யோகசிங்கம், கண்ணதாசன

✡ தர்மரட்ணம் தர்மசிவாகரன் (காணாமற்போனவர்) அளவெட்டி மேற்கு, இளவாலை - மரியம் புஸ்பதேவி, தர்மரட்ணம், சின்னத்துரை, தேவபாலன். (ஐ-5)

### பிரச்சினைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி திரட்டப்படுவதைத் தடைசெய்யுமாறு நான் ஜேர்மன் அரசைக் கேட்டுள்ளேன்.

வெளிநாடுகளில் விடுதலைப் புலிகள் நிதி சேகரிப்பது தடுக்கப்படாவிடில் இலங்கையில் ஆயுதப் போராட்டம் காலவரையின்றித் தொடரும் ஆபத்து உண்டு.

தமிழர்கள் கேட்கும் தனிநாட்டுக் கோரிக்கையை வழங்க முடியாது. அது என்றுமே நடைபெறாது. அவர்களுக்குரிய ஏனைய உரிமைகளை வழங்குவதற்கு நாம் பின்னிற்க மாட்டோம். அவர்களது உரிமைகளை வழங்கும் சக்தி இப்போதைய எமது அரசிடம், முந்திய அரசாங்கம் எதனையும்விட அதிகம் உண்டு - என்று சொன்னார். (அ-க-7)

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

சிங்கள மாணவர்கள் தாங்கள் தமிழ் மாணவர்களால் தாக்கப்பட்டதாக வவுனியா பொலீஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்ததை அடுத்து, அங்கு விரைந்த பொலீஸார் தமிழ் மாணவர் மீது தாக்குதல் நடத்தினர் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் ஆறு சிங்கள மாணவர்களும், இரு தமிழ் மாணவர்களும், தமிழரான விடுதிப் பொறுப்பாளர் ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

தமிழ் மாணவர்கள் விடுதியில் தங்கியுள்ளனர் என்றும் -

தமிழ் மாணவர்கள் தம்மைத் தாக்குவார்கள் என்ற அச்சத்தில் சிங்கள மாணவர்கள் கல்வியியற் கல்லூரி முன்றிலில் நேற்றிரவு தங்கியிருந்தனர் என்றும் -

அவர்களுக்குப் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது என்றும் - தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாகக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி த.அழகரத்தினம் உயர் மட்டத்துடன் தொடர்பு கொண்டுள்ளார்.

# எம்.பி.பி.எஸ். பரீட்சையில் 42 மாணவர்கள் சித்தி

யாழ்ப்பாணம்,மார்ச்14

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களில் 42 பேர் எம்.பி.பி.எஸ் பரீட்சையில் சித்தியடைந்து வைத்தியர்களாக வெளியேறுகின்றனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

செல்விகள் எஸ்.ஹம்சானந்தி, எஸ்.கோமதி, ரி.ஜெயந்தி, வி.மேனகா, எம்.சிவரஞ்சனி, என்.வளர்மதி, வை.றாதிகா, டபிள்யு.அனிற்றா லோஜினி, என்.மங்கையற்கரசி, ரி.மைதிலி

எஸ்.நந்தினிதேவி, ரி.ராஜநந்தினி, ரி.றெஜினியா அமரநந்தா, எஸ்.சௌமியாறிகா, எஸ்.சுகன்யா, எஸ்.சுமதி, பி.சுதர்சினி, கே.கமலினி, என்.தீபசோதி, எஸ்.சினோதயா, பி.உசாநந்தினி ஆகிய 21 மாணவிகளும் -

ரி.குமணன், ரி.நிமலரஞ்சன், எஸ்.அன்ரன்துஷ்யந்தன், என்.அரவிந்தன், பி.ஜெசிதரன், ஜீ.ஜோகன் ஜீவநேசன், எச்.ஆர்.குணரட்ணம், ஆர்.இந்திரலிங்கம், வி.ஜெகரூபன், எஸ்.கலையழகன், ஆர்.கேசவன், எஸ்.குருபராநந்த, எஸ்.முகுந்தன், எஸ்.சதாகரன், கே.சத்தியேந்திரன், ரி.சயந்தன், ஆர்.சிவானந்தன், வி.சுகுமார், எஸ்.சிவரூபன் ஆகிய 19 மாணவர்களுமாக மொத்தம் 40 பேர் யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து சித்தியடைந்தனர்.

வட இலங்கை மருத்துவக்கல்லூரியில் (என்.எல்.எம்.சி) இருந்து யாழ்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மாணவர்களில் செல்வி பி.கலைவாணி என்ற மாணவி சித்தியடைந்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்விப் போதனை பெற்ற எம்.சற். எம்.றியாஸ் என்ற மாணவனும் சித்தியடைந்துள்ளார்.

இந்தப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த மாதம் 26 ஆம் திகதி வெளியிடப்பட்டன. தற்போது ஒருவருட உள்ளகப்பயிற்சி பெறுவதற்காக வைத்தியசாலைகளில் இவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-6-ரி)

### அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளைமறுதினத்துக்குள் - வெள்ளிக்கிழமைக்குள் - சரியான பதில் கிடைக்காவிட்டால் போராட்டத்தை விஸ்தரிப்பதென அங்கு முடிவுசெய்யப்பட்டது.

அதேவேளை -

தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கும் விடயத்தில் அமைச்சர்கள் மத்தியில் முரண்பாடுகள் நிலவுவதாகவும் -

அதற்கிடையில் அமைச்சர்கள் சிலர் தொண்டமானுக்கு ஆதரவு வழங்கி வருவதாகவும் - தெரிய வருகிறது. (க-3-20)

### எலும்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான்ஸ்டபிள் அப்துல் நஸார் வெளிநாட்டுக்குத் தப்பி ஓடித் தலைமறைவாகியுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதென்றும் நீதிவானிடம் பொலீஸார் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து வழக்கு விசாரணை மே மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.(க-3-7)

### டாக்டர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு டாக்டர்களின் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இம்மாதம் 20 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் டாக்டர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-5-139)


1000 மாணவர்களுக்கு
மாபெரும் புலமைப்பரிசில்
நுண்ணறிவுப் போட்டிப் பரீட்சை மூலமாக 1000 மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்குக் கணனிப்பயிற்சி அளிப்பதுடன் பயிற்சி முடிவில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகங்களில் உயர் கல்வி வாய்ப்பையும் பெற்றுக் கொடுக்கிறோம். இப்போட்டிப் பரீட்சைக்கு அனைவரும் விண்ணப்பிக்கலாம்.
பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களில் 80%மான மாணவர்களுக்கு 100% புலமைப் பரிசிலும் ஏனைய மாணவர்களுக்கு 80% புலமைப் பரிசிலும் வழங்கப்படும். அதனால் பாடசாலை அதிபரின் ஊடாக விண்ணப்பங்களை மேற்கொள்ளவும்.
வடமராட்சி பிரதேச மாணவர்கள் எமது அச்சுவேலி கிளை நிறுவனத்தில் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளவும்.
விண்ணப்ப முடிவு திகதி: 25.03.01
UNIVAC
1201, K.K.S. Road, Jaffna.
(85347)



CHEMISTRY
General Chemistry
ஆரம்பம் - 16.03.2001
CHEMISTRY - அன்பு
இன்று ஆரம்பமாகிறது- சேதன இரசாயன வினாவிடை
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (85424)



கணக்கீடு
A/L 2000 Day /2001
கட்டுப்பாட்டுக்கணக்கு
ஆரம்பம்:- இன்று 3 p.m
(Wed, Fri 3 - 5)
S. தவா
B.Com(Hons) Acc.Spl.
NEW SCIENCE COLLEGE
JAFFNA
(85391)



கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி.
A/L 2001 Day Class
பொருளியல் II
பணமும் வங்கியும்
S.வரதராஜன்
ஆரம்பம்:- 15-03-2001
மு.ப.8.30 - பி.ப. 1.00 வரை
Note: இடவசதியைக் கருத்தில் கொண்டு அனுமதி வரையறுக்கப்பட்டுள்ளது.
(85782)



விஜேயின் புதிய ஓடியோ CD வெளியீடுகள்
டும் டும் டும்
மாசிலா உண்மைக் காதலே
ஷக்கலக்க பேபி
நாகேஸ்வரி
அர்ஜுனா
"இன்னிசை உலவரும் இன்ப இசைச்சோலை"
"விஜேய் றெக்கோடிங் சென்ரர்"
539, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
கிளை - பிரதான வீதி, மானிப்பாய்.
(85416)



கணக்கீடு
முகுந்தன்
B.B.A.(HONS)F.M.(SPL)
A/L 2002
பங்குடைமை
இரு இடங்களில் ஆரம்பம்
இணுவில்
பொருளியற் கல்லூரி
இன்று (14-03-2001) புதன் - 3.30 மணி
BARATHY
சித்தன்கேணி
15-03-2001 வியாழன் 3.30 மணி
Note:
இரு இடங்களிலும் புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.
(85403)



கணக்கீடு
A/L 2001
கம்பனி முடிவுக்கணக்கு
ஆரம்பம்:- 17-03-2001 சனி
(காலை - 6.30)
ஆசிரியர் - இ.வின்சன
ஸ்ரார் கல்வி நிலையம
சுன்னாகம்
(85391)



எமது புதிய வீடியோ CD வெளியீடு
உன்னைத் தேடி வருவேன்
(மர்மப்படம்)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/15719)



எமது வீடியோ CD வெளியீடு
உன்னைத் தேடி வருவேன்
ஓடியோ CD வெளியீடு
டும் டும் டும்
மாசிலா உண்மைக்காதலே
அல்ரா எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி15720)



இன்றைய CD வெளியீடு
(திரையரங்குகளுக்கு மட்டும்)
உன்னைத் தேடி வருவேன்
ஆர்க் வீடியோ லைபிறறி
அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
(C/15721)



வெளிவந்துவிட்டது!
பேரினப் பொருளாதாரம்
ஆசிரியர் வே.கருணாகரன்
(85340)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரநிருபசிங்கம் பாக்கியம்

(P.R.P சிங்கம் ஓவசியர்)

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரநிருபசிங்கம் பாக்கியம் (13.3.2001) செவ்வாய்கிழமை பகல் அமரரானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகப்பர் நாகலிங்கம் - செல்லமுத்து தம்பதிகளின் மூத்தமகளும் காலஞ்சென்ற P.R.P சிங்கம் ஓவசியர் அவர்களின் அன்பு மனைவியும், சிவயோகம்மா(பொகவந்தலாவா), காலஞ்சென்ற இராஜசிங்கம்(ஹற்றன்), சிவராஜசிங்கம்(அல்துமுல்வ) ஜெகதீஸ்வரி, அருள்ராஜசிங்கம் (கொழும்பு), விஜயராயசிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற இரட்ணராஜசிங்கம், சரோஜினிதேவி (ஜேர்மனி), மணிமேகலை, வரதராஜசிங்கம், தர்மகுலராஜசிங்கம்(லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், V.E.A கனகசிவம் (பொகவந்தலாவ), சறோயினி(ஹற்றன்), மகேஸ்வரி(லண்டன்), அமிர்தலிங்கம், வாசுகி, ஜெகசிவமணி(லண்டன்), லோகேஸ்வரன் (ஜேர்மனி), மகேஸ்வரன், வசந்தராணி ஆகியோரின் அருமை மாமியாரும், சிவகுமார், சிவகௌரி, சிவகீதா, சிவகரன், சிவலக்ஸ்மி, சியாமளா, தயாளசிங்கம், மஞ்சுளா, வத்சலா, பிரேமலா, தர்மராஜசிங்கம், தர்மினி, காலஞ்சென்ற நிமலராஜசிங்கம், கிரிஷாந்தன், மாதுமை, உதயசிங்கம், மதுரா, நிருபசிங்கம், துசித்தா, சோபிகா, கோபிகா, நிலான் கிரிநாத், மீதைபானு, நளின் ரவிநாத் ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (14.3.2001) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15/15, மாரியம்மன் வீதி,*
*திருநெல்வேலி.*

தகவல்:
**மக்கள், மருமக்கள்.**
**ப. அருள்ராஜசிங்கம்**

(85421)

### நாகநாதர் முருகேசு

(ஓய்வு பெற்ற தபால் ஊழியர்-நெடுந்தீவு)

நெடுந்தீவு 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் முருகேசு நேற்று (13.03.2001) காலமாகிவிட்டார்.

அன்னார் அமிர்தவல்லியின் அன்புக்கணவரும், குணபூசணி(நெடுந்தீவு), பத்மஜோதி(நோர்வே), சத்தியஜோதி(நோர்வே), கங்காதரன்(நெடுந்தீவு), அமிர்தமந்திரன்(ஆசிரியர்,நெடு.ம.வித்), காலஞ்சென்ற கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும்-காலஞ்சென்ற பரராசசிங்கம், லோகன்(நோர்வே), சிங்கர்(நோர்வே), புஸ்பவதி(நெடுந்தீவு) ஆகியோரின் அன்பு மாமனாரும் மிலானி, பாமினி, ருமேக்கா, அபிராமி, யசிலா, பசார், ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2001) புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நெடுந்தீவு கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*9ஆம் வட்டாரம்,*
*நெடுந்தீவு.*

தகவல்:-
**மு.அமிர்தமந்திரன்**
(ஆசிரியர் யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்)

(C/15722)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.03.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.